# எச்.எல். ஜமால்தீன்
## பொலிஸ் அத்தியட்சகர்
## அவர்களை







## மருதமுனை
# பாராட்டுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FELICITATION CEREMONY
# AND
# GRAND RECEPTION

**TO OUR FIRST S.P.**

## *Mr. H. L. Jamaldeen* M.A.

*by*

*The People of Maruthamunai*

*at*

*Ashraff Hall,*

*Maruthamunai Al-Manar Central College.*

*13-01-2008*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOARD OF MAGAZINE

1) *Mr. M.H. Cader Ibrahim*
2) *Mr. A.M.A. Samad*
3) *Mr. A.L.M. Munas*
4) *Mr. A.M. Ibrahim*
5) *Mr. N.M.M. Ismail*
6) *Mr. S.L. Anverr Khaann*
7) *Mr. M.I.M. Mukarraf*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some Pages from

# OUR S.P's DIARY

| | |
|---|---|
| BORN | on 01.03.1955 to Hameedu Lebbai and Seenaththummah. |
| RECEIVED | Primary Education (Grade 1- 5) at KM/ Maruthamunai Al-Hambra Vidyalaya. |
| | Post Primary Education (Grade 6 - 9) at Maruthamunai Al-Manar Central College. |
| | Secondary Education (G.C.E. (O/L)) at KM/ Wesley High School, Kalmunai. |
| PASSED | GCE (O/L) Examination in 1972. |
| RECEIVED | Upper Secondary Education (GCE (A/L)) at Elavalai Hentry College, Jaffna. |
| JOINED | School Football Team in 1975. |
| SECURED | 'Gold Medal' for the Best Player at the All Ceylon School Football Championship in 1975. |
| JOINED | Green Light Sports Club, Kalmunai and United Sports Club, Maruthamunai in 1975. |
| APPOINTED | as a teacher on merit and electoral basis in 1975. |
| SERVED | as a teacher at Katpiddy Al-Aksha M.V. and Galgamuwa M.V. from 1975 to 1980. |
| ENTERED | University of Peradeniya to the Faculty of Arts in 1977. |
| JOINED | University Football Team. |
| AWARDED | Degree, Bachelor of Arts in 1980. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *JOINED* | *Sri Lanka Police Service as a Sub Inspector of Police (SI) on 16.04.1980.* |
| *PROMOTED* | *to the rank of Inspector of Police (IP) from 24.12.1980* |
| *REPRESENTED* | *Sri Lanka Police Football Team from 1980 to 1985.* |
| *JOINED* | *Eastern Youth Sports Club, Maruthamunai in 1980.* |
| *ESTABLISHED* | *Maruthamunai Football League in 1983.* |
| *SAT* | *the Competitive Examination for the recruitment to Assistant Superintendent of Police (ASP) and got through it in 1984.* |
| *APPOINTED* | *as a Trustee of Maruthamunai Masjid - ul- Kabeer Jummah Mosque in 1984 and served till 1986.* |
| *MARRIED* | *to Siththy Janoofa (Daughter of Late Abdul Raheem Maraikkar and Semilathummah) on 10.08.1987* |
| *ELECTED* | *as a Hony. President of Ampara District Football Association in 1994 and still serving* |
| *FORMED* | *Social Renaissance Association, Maruthamunai in 1996 and still serving as the President of the Association.* |
| *COMPLETED* | *Post Graduate Diploma in Personnel Management from UK in 1996.* |
| *FILED* | *a Case in the Supreme Court against the violation of human rights in 1997.* |
| *SAT* | *the Competitive Examination for the recruitment to ASP on 01.03.1998 and got through.* |
| *AWARDED* | *Medical Practitioner Certificate in Homeopathic Medical in 1999.* |
| *FORMED* | *'Highgrove' Social Service Movement in 2000.* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *WON* | *the Case (which was filed in 1997) filed in the Supreme Court in 2001.* |
| *PROMOTED* | *to the rank of Assistant Superintendent of Police with effect from 31.05.2001* |
| *ATTACHED* | *as an ASP to the Police Head Office, Colombo.* |
| *FELICITATED* | *by the people of Maruthamunai at the Grand Felicitation Ceremony and a Souvenir Published in honour of his promotion to be the 1st ASP from Maruthamunai on 27.01.2002.* |
| *COMPLETED* | *Diploma Course on Human Rights in 2003.* |
| *ATTENDED* | *Team Building and Conflict Management at Administrative Staff College of India (Hyderabad) in 2003.* |
| *PARTICIPATED* | *Football Administration Course in Malaysia in 2004.* |
| *COMPLETED* | *Hostage Negotiation Course at United State of America in 2006.* |
| *COMPLETED* | *National Training Course on Public Health Emergency Disaster Management, Faculty of Medicine - University of Peradeniya in 2006 December.* |
| *APPOINTED* | *Member of the Tsunami Housing Co-ordinating Committee Represent Beneficiaries of Maruthamunai by His Excellency the President on 16.03.2006.* |
| *APPOINTED* | *as the President of Maruthamunai Masjid - ul- Kabeer Jummah Mosque in 2006 and still serving.* |
| *APPRECIATED* | *Certificate of Appreciation by Embassy of U.S.A Colombo, Sri Lanka in 2007.* |
| *AWARDED* | *Master Degree, Master of Arts in Public Administration in 2007.* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *PROMOTED* | *to the rank of Superintendent of Police with effect from 07.06.2007.* |
| *WORKED* | *as an instrument for the construction of the Masjid-ul-Kabeer Jummah Mosque, Maruthamunai.* |
| *INVOLVED* | *actively in the rehabilitation of the Maruthamunai Public Market.* |
| *INVOLVED* | *highly in the rebuilding of Tsunami affected Maruthamunai Shams Central College, in the relocation site.* |
| *ORGANIZED* | *providing the scholarship for the Grade 5 students who got through the Scholarship Examination.* |
| *PRESENTLY* | *as a Deputy Director attached to the Police Training School, Kallady Wings, Batticaloa from 10.11.2007 and to date.* |
| *INVOLVED* | *highly in the renovation of Mashoor Moulana Play Ground and the construction of Mashoor Moulana Sports Complex to which the Foundation Stone was laid on 11-01-2008.* |
| *FELICITATED* | *by the people of Maruthamunai at the Grand Felicitation Ceremony and a Souvenir Published in honour of his promotion to be the 1st SP from Maruthamunai on 06.01.2008.* |

**CONGRATULATIONS!!!**

Compiled by :

S.L. Ajmal Khan *B.B.Ad. (SL), Dip-in-Edu.*

S.L. Anverr Khaann *B.A. (SL)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR S.P.



**H.L. Jamaldeen**
**M.A., Dip. in Personnel Management (UK)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.P. with his wife and children

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌரவ. ஜனாபா.**
**பேரியல் இஸ்மாயில் அஷ்ர..ப் M.P.**
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர்,
தலைவி, தேசிய ஐக்கிய முன்னணி
*அவர்களின்*



# ஆசிச் செய்தி

## பொதுப் பணியில் பூரிக்கும் கடமை வீரர் எச்.எல். ஜமால்தீன் [எஸ்.பி.]

பொதுப் பணிகள் பலவற்றை ஒரு தோளிலும், தொழில்சார் கடமைகளை மறு தோளிலும் சுமந்துகொண்டு - சுறுசுறுப்பாய் இயங்கியபடி, அதிலே சுகம் காணும் கடமை வீரர் ஒருவரை - வாழும் போதே வாழ்த்தும் நன்நோக்கில், அவர்தம் சேவை நலனைப் பாராட்டி எடுக்கும் விழா மலருக்கு, எந்தன் வாழ்த்துரையை வழங்குவதில் வற்றாத மகிழ்ச்சியை அனுபவிக்கின்றேன்.

“சொந்த வேலையைக் கவனிக்கவே நேரம் போதவில்லை; இதிலே ஊர் வேலையைக் கவனிக்க நேரமெங்கே கிடைக்கிறது?” என முணுமுணுக்கும் மனிதர் நடுவே, ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு மேலாக, பல்வேறு பொது அமைப்புகளுடன் கை கோர்த்துக் கொண்டு, தொழில் வழி கடமைகளையும் கச்சிதமாய்ப் புரிந்துகொண்டு, நாட்டுக்கும் - சமுதாயத்திற்கும் பயனுள்ள ஒரு பிரஜையாய் ஒருவர் நம்மிடையே வாழ்கிறார் என்றால், அவர் வேறு யாருமல்லர், மருதமுனை மண்ணின் மைந்தன் பொலிஸ் உயரதிகாரி (எஸ்.பி.) எச்.எல். ஜமால்தீன் அவர்களே என்றால் அது மிகையாகாது.

கடந்த 1980 இல் கிழக்கு மாகாண இளைஞர் விளையாட்டுக் கழகத்திலிருந்து சமுதாயத் தெருக்களில் உலா வரத் தொடங்கியது முதல் இன்று வரை கல்வி - சமயம் - சமூகம் - விளையாட்டு எனப் பலதரப்பட்ட துறைகளில் சேவை மணங் கமழ்ந்து வரும் சகோதரர் ஜமால்தீன், மருதமுனையின் முதல் எஸ்.பி. யாகப் பதவியுயர்வுபெற்று, பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தானுண்டு; தன் வேலையுண்டு" என வாழாமல், சுயநல வட்டத்தை விட்டும் வெளியே வந்து, சமுதாயத்தையும் - நாட்டையும் பற்றிச் சிந்திக்கும், செயல்படும், சாதிக்கும் எவரையும் சமுதாயம் என்றுமே மறப்பதில்லை; அவர்தம் நினைவுகளைத் துறப்பதில்லை என்பதற்கு, நம் சகோதரர் ஜமால்தீன் நல்லதோர் உதாரணப் புருஷராவார் எனக் கூறினால் அது மிகையல்ல. பொதுப் பணி புரிவதில் பூரிக்கும் ஜமால்தீன் மக்களால் மதிக்கப்படுவதும், பாராட்டப்படுவதும், அவருக்கு விழா எடுப்பதும், அதையொட்டி சிறப்பிதழ் வெளியிடப்படுவதும் சமுதாயம் செய்யும் கைமாறாகும்.

வாழும் போதே வாழ்த்தப்படும் எச்.எல். ஜமால்தீன் **SP** தன் சேவைகளை என்றும் தொடர வேண்டும்; தொடரும் சேவைகளில் அவர் புகழ் படர வேண்டும்; பரவ வேண்டும் என ஆசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஜெயகுமார் தங்கவேலு** (LL.B.), D.I.G.,
தலைவர் - பாதிப்புற்றவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான
பாதுகாப்புப் பிரிவு, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

மருதமுனை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வன் எச். எல். ஜமால்தீன் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றமைக்காக மருதமுனை மக்கள் பாராட்டு வைபவமொன்றை நடாத்துவதையிட்டும் அதற்காக ஒரு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதிலும் நான் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

ஜனாப். எச். எல். ஜமால்தீன் 1980 ஆம் ஆண்டு உதவிப் பொலிஸ் பரிசோதகராகச் சேர்ந்து இந்நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தனது கடமைகளைச் செவ்வனே செய்த ஒரு உத்தியோகத்தராவார்.

மேலும் தனது பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு பட்டப்பின் படிப்பினை காமராஜ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டவர் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பயிற்சியும் பெற்றவராவார்.

இன்னும் இலங்கை பொலிஸ் திணைக்கள உதைபந்தாட்டக் கழகத்திலும், உயிர்காப்பு கழகத்திலும் அங்கத்துவம் பெற்றது மட்டுமல்லாது பொலிஸ் மாவட்ட ஹொக்கி, றகர் போன்ற விளையாட்டுகளிலும் ஈடுபட்டவராவார்.

இன்னும் இவர் பொலிஸ் திணைக்களத்திற்குக் கிடைத்திருக்கும் ஒரு சொத்து மட்டுமன்றி கடமையையே தனது வாழ்நாளாகக் கொண்டவர். இவர் மக்களுக்காகவே தன்னை சேவகனாக்கிக் கொண்டவர்.

நான், இவர் எதிர்காலத்தில் இன்னும் பல பதவி உயர்வுகளைப் பெற்று மக்களுக்காகச் சேவையாற்ற வல்ல இறைவன் சகல சக்திகளையும் வழங்கப் பிரார்த்திப்பதுடன் இவரது குடும்பம் நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message From*



**Mr. V. Manilal Fernando**
FIFA Development Officer in Colombo,
Chairman - Management Committee,
Football Federation of Sri Lanka.

We are glad to note that the people of Maruthamunai have decided to accord a felicitation ceremony and a grand reception to Mr. H. L Jamaldeen on his promotion as the Superintendent or Police.

We the Football Federation of Sri Lanka also wishes to congratulate Mr. Jamaldeen on his appointment to this high post.

We take this opportunity to appreciate the services he have rendered over the years for the promotion and development of football specially in the Ampara District and look forward to his continued support for this common man's game.

He is a well respected officer and apart from football we note that he has been involved in many institutions and assisted in their activities.

We wish him all success in his future endeavours.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ அல்-ஹாஜ்.
**எம்.எம். முகம்மது முஸ்தபா M.P.**
பிரதி உயர்கல்வி அமைச்சர்

*அவர்களின்*



# ஆசிச் செய்தி

நண்பர் எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டுமுகமாக மருதமுனை மக்களால் நடாத்தப்படும் பாராட்டு விழாவின் நினைவு மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் கல்விமான்கள் பலர் வெவ்வேறு துறைகளில் ஊக்கங்காட்டிச் சென்ற வேளையில் நண்பர் ஜமால்தீன் அவர்கள் ஆசிரியத் தொழிலில் இருந்து பொலிஸ் துறையைத் தேர்ந்தெடுத்தமையை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அன்று பொலிஸ் இன்ஸ்பெக்டராக பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து இன்று பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமை கல்முனைப் பிரதேசத்திற்கும், முஸ்லிம் சமுதாயத்திற்கும் கிடைத்த உயர்ச்சியாகவே நான் கருதுகின்றேன்.

மேலும் தனது உத்தியோகக் கடமையுடன் மட்டும் நின்றுவிடாது, ஒரு உதைபந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்து அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவராக இருந்து அகில இலங்கை மாவட்ட மட்டத்தில் சிறந்த மாவட்டமாக அம்பாரை மாவட்டம் திகழ காரணகர்த்தாவாக விளங்கும் நண்பர் ஜமால்தீனுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்களுக்குள் இரண்டாவதாகவும், மருதமுனையின் முதலாவதாகவும் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றிருக்கும் நண்பர் ஜமால்தீன் எதிர்காலத்திலும் பொலிஸ் திணைக்களத்தில் இன்னும் பல சிறப்பான பதவியுயர்வுகளைப் பெறவேண்டுமென வாழ்த்துவதுடன், எதிர்காலத்தில் தனது இப்பதவியின் மூலம் சமாதானம் மலர தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுவதுடன், அவரது எதிர்கால சேவை சிறப்புடன் அமைய இறைவனைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message From*



**Hon. S. Nijamudeen M.P.**
Deputy Minister of Public Estate Management and Development.

It gives me great pleasure in sending this message of felicitation to the souvenir that is being published to mark the felicitation ceremony accorded to Mr. H.L. Jamaldeen on his promotion to the rank of a Superintendent of Police.

I consider that this promotion is an honour vested on him for his efficient and dedicated services rendered to the public during his services in the Police Department.

Mr. Jamaldeen deserves this promotion and I hope this elevation in this S.P. rank will give him more strength to enrich his services to the people and the country.

I wish him all success in the future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். அப்துல் றசாக் மன்சூர்**

**சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,**

**வர்த்தக வாணிப கப்பல்துறை அமைச்சர்,**

**குவைத், பஹ்றேன் தூதுவர்**

*அவர்களின்*



# ஆசிச் செய்தி

மருதமுனையைச் சேர்ந்த ஜனாப். எச்.எல். ஜமால்தீன் எம்.ஏ. அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றதை கௌரவிக்குமுகமாக அவர் பிறந்த இடமான மருதமுனை மக்கள் மகிழ்ச்சி விழா ஒன்று நடாத்த தீர்மானித்துள்ளமையை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மருதமுனை கிழக்கு மாகாணத்திலே உள்ள பழம்பெரும் முஸ்லிம் கிராமங்களில் ஒன்று. இங்கே வாழும் முஸ்லிம்கள் மார்க்க பக்தியிலும், மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற சிந்தனையிலும் பயிற்றப்பட்டவர்கள். குறிப்பாகக் கல்வி வளர்ச்சியிலும், தொழில் வழிமுயற்சியிலும் அக்கறை கொண்டவர்கள்.

பொலிஸ் அத்தியட்சகர் (S.P.) ஜமால்தீன் அவர்கள் இளம் வயதிலிருந்தே கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும், குறிப்பாகக் கால்பந்து விளையாட்டில் சிறந்து விளங்கியவர். விளையாட்டுத் துறையில் விருப்பமுற்றவராகத் திகழ்ந்தமையால் இவர் சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றதும் இலங்கை பொலிஸ் நிர்வாகத்தில் சேர உறுதிபூண்டார்.

1980 ஆம் ஆண்டு அவர் பொலிஸ் இலாகாவில் சேர வேண்டுமென்று தீர்மானித்த காலத்தில் நான் கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். இவருடைய தீர்மானத்தை மகிழ்ச்சியுடன் ஏற்று எனது அங்கீகாரத்தை வழங்கினேன்.

1980 இல் இருந்து 07-06-2007 வரை இவர் பொலிஸ் இலாகாவில் கடமை செய்த பொழுது பொது நிர்வாகத்துறையில் M.A. பட்டத்தை 2007 இல் பெற்றிருக்கிறார்.

ஜமால்தீன் S.P. அவர்கள் எப்பொழுதும் ஏழை, எளிய மக்களுக்கு உதவ வேண்டுமென்ற மனம் உள்ளவர். இளைஞர் கழகங்களுக்கு உதவி, கால்பந்தாட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் அம்பாரை மாவட்டத்தை உயர்த்த வேண்டுமென்று அயராது உழைத்தவர். தான் பிறந்த கிராமமாகிய மருதமுனைக்கு தன்னாலான எல்லாவகையான உதவிகளையும் செய்ய வேண்டுமென்ற அவா உள்ளவர்.

மேலும் அவர் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜு"ம்ஆப் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபைக்கு தலைவராக இருந்து சிறப்பாகக் கடமையாற்றி வருகின்றார். அங்குள்ள மக்கள் அவரை தலைவராகத் தெரிவு செய்ததிலிருந்து SP மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஜனாப். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றது அவருடைய கடமை, கண்ணியம் என்ற இலட்சியங்களுக்குக் கிடைத்த வெற்றி என்று கூறுவது மிகப் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

இவருடைய பதவி உயர்வால் அவர் பிறந்த மருதமுனை மக்கள் மட்டுமன்றி முழு கிழக்கு மாகாண மக்களுமே பெருமைப்படுகின்றார்கள்.

பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப். ஜமால்தீன் அவர்களின் நற்பணி வழிகாட்டல்கள் இப்பிராந்திய மக்களுக்கு என்றென்றும் இருக்க வேண்டுமென்றும், அடுத்தடுத்த பதவி உயர்வுகளும் கிடைக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவலர் அல்-ஹாஜ்.**
**எஸ்.இஸட்.எம். மஷூர் மௌலானா**
முன்னைநாள் செனற்றர்

*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

மருதமுனை எனது பிறந்த பொன்னாடு. அதன் வளர்ச்சியையும், உயர்ச்சியையும் கண்டு அக மகிழ்ச்சி பெறுபவன் நான். அது போன்று மருதமுனை மகன் ஒருவன் உயர்ச்சி அடைவதையும், போற்றப்படுவதையும் கண்டு மிக்க மகிழ்ச்சியும் பேருவகையும் அடைபவனும் நான். இதன் அடிப்படையில் 13-01-2008 இல் மருதமுனை மகன் என் அருமை மச்சான் எச்.எல். ஜமால்தீன் அவர்கள் காவல் துறையில் **SP** என்ற உச்ச பதவி பெற்றதை மருதமுனை மக்கள் மிகவும் உற்சாகத்துடன் ஒரு பெரு விழா எடுத்து அவரை மகிமைப்படுத்துவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மச்சான் ஜமால்தீன் அவர்கள் சேவை மனப்பாங்குடனும், எடுத்த காரியத்தை துணிவுடன் செயற்படுத்தும் ஒரு கடமை வீரன். மருதமுனையின் வளர்ச்சியிலும், அதன் அபிவிருத்தியிலும் கண்ணும் கருத்துமுடையவன். மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலின் தலைமை பதவியேற்று அதன் நிருவாகத்தை திறம்பட நடாத்துவதை அறிந்து தெரிந்து, மிக்க மகிழ்ச்சி கொள்ளும் நான் எதிர் காலத்தில் தான் பிறந்த கிராமத்தின் நலன் கருதி செயற்படக்கூடிய ஆற்றல் உள்ளவன் என்ற திடகாத்திரமான நம்பிக்கை கொண்டவன் நான். அதுபோன்று பிறிதொரு சந்தர்ப்பம் பெற்று திறம்படச் செயற்படுவதற்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

காவல்துறையில் இவர் பெற்றிருக்கும் பெரும் பதவி பொறுப்பு வாய்ந்தது. பக்கச் சார்பற்ற நேர்மையான முறையில் செயற்பட வேண்டும் என்பது எனது பேரவாவாகும். அந்த செயற்பாட்டில் நன்கு செயற்பட்டு நற்சேவை செய்வதன் மூலம் அவருக்குப் பற்பல உயர்ச்சி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் சிலருக்கு மட்டுந்தான் பெறுமதியான வாய்ப்பும் வசதியும் கிடைப்ப துண்டு. சிலருக்கு வாய்ப்புக் கிடைப்பதேயில்லை. சூழ்ச்சிகளாலும் தடுப்பு முயற்சிகளாலும் கிடைக்கவந்த வாய்ப்பு வசதிகளும் கிடைப்பதில்லை. சிலருக்கு எவ்வளவுதான் சிறப்பான வாய்ப்பும் வசதியும் கிடைத்தும் அதனைப் பாவிக்காது, பாவிக்கத் தெரியாமலும் போய்விடுகின்றன. ஆனால் பொலிஸ் அத்தியட்சகர் மச்சான் ஜமால்தீன் அவர்களுக்கு உரிய முறையில் பொருத்தமான உயர்பதவி கிடைத்துள்ளது. அப்பதவியை மக்களின் சேவைக்காக, அவர்களின் தேவை உணர்ந்து செயற்படுவார் என்ற திட்டவட்டமான நம்பிக்கை எனக்குண்டு. அதுபோன்று சிறப்பாக தனது கிராமத்துக்கும் பிரதேச மக்களுக்கும் சேவை செய்யக்கூடிய பொறுப்பு வாய்ந்த பதவி ஒன்றையே மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அப்படியான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்க வேண்டும் என்று நான் மனமாற ஆசிக்கின்றேன். பிரார்த்திக் கின்றேன். எனது ஆதரவும், ஒத்தாசையும் திட்டவட்டமாக அவருக்குண்டு. மனமாற வாழ்த்துகின்றேன். பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greetings From



**Very Rev. Fr. Sritharan Sylvester**
Director,
Caritas EHED,
Batticaloa / Kalmunai.

A message of Good Will with pleasure
To **Janab H.L Jamaldeen Supdt. of Police** we treasure
Hailing from the land of Maruthamunai
Very popular in East of Sri Lanka for Weaving Industry & Cultural Heritage
You made Home Land very proud
To be Blessed with a Son like you.

Jamaldeen was a versatile sportsmen
In younger ages in School career in Soccer
Praiseworthy performances & Accolades did carry
Our son to Illavalai St. Henry's
G.C.E. A/L he astutely did study
Culminating as B.A Graduate in University of Peradeniya.

First as a Teacher & later as S.I in Police Force
High Morale, Self Discipline, Commitment, Dedication did show
The young Inspector's passion for Law & Justice revealed zest for work
Rewards & merits followed automatically and achieved
Success in merit examination for A.S.P Grade.

Janab Jamaldeen's Exemplary Character, Dynamic Nature
Impeccable style of approach for complexities of problems
And above all, Love for fellow humans & Mother Land
Personified him a loveable person of native Maruthamunai
And an outstanding personality of Eastern Province.

My association with Janab Jamaldeen is rooted firmly
Marvelous Soccerite from Teen Age, a member of **Green Light** Foot Ball Club was he
The club founded by my late father Mr. P. Tharmarajah
First President of Ampara District Foot Ball Association
Which later my beloved brother Jamaldeen did succeed as President.

God Bless & Best Wishes I extend
To Janab Jamaldeen's Better Half & children
May His Exemplary Lifestyle, Wisdom & Personality Trait
Be an exhilarating example to the youth and elderly of Maruthamunai
For very many years to come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசகீர்த்தி ஏ.எல்.எம். முனாஸ் J.P.**
பிரசித்த நொத்தாரிஸ்,
அனுமதி பெற்ற அரச மொழிபெயர்ப்பாளர்,
முன்னாள் வருமான வரி மதிப்பீட்டாளர்,
விழாக்குழுத் தலைவர்



*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

எனது நண்பரும் மைத்துனருமான ஜனாப். எச். எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுர்வு பெற்றமைக்கு மருதமுனை மக்கள் அனைவரும் இணைந்து வழங்கும் மாபெரும் பாராட்டு விழாவின் போது வெளியிடப்படுகின்ற நினைவு மலருக்கு இவ்விழாக்குழுவின் தலைவராக இருந்து இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நானும் நண்பர் ஜமால்தீன் அவர்களும் கொழும்பில் பணிபுரிந்த காலங்களில் எமது ஓய்வு நேரங்களை ஒன்றாகக் கழிப்போம். அவ்வேளைகளில் எமது உரையாடல்கள் அதிலும் குறிப்பாக நண்பர் ஜமால்தீன் அவர்களின் பேச்சு எமது கிராமத்தின் கல்வி, விளையாட்டு, சமாதானம் போன்ற விடயங்கள் பற்றியதாகவே அமைந்திருக்கும். இந்த விடயங்களில் வெறும் பேச்சளவில் நின்றுவிடாது மருதமுனையின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை வளர்ச்சியில் இவர் காட்டிவரும் அக்கறை மற்றும் சமாதானச் செயற்பாடுகளின் போது இவரின் பங்களிப்பு என்பன இவர் ஒரு செயல்வீரர் என்பதை நிரூபித்துக்காட்டின.

இவர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் பணிபுரிந்தபோது இவருடைய திறமை, விளையாட்டுத்திறன், ஆளுமை ஆகியவற்றின் மூலம் இவருடைய மேலதிகாரிகளிடம் மிகவும் நெருக்கமாகப் பழகியதை நான் அவதானித்துள்ளேன். இதன் மூலம் இவர் பொலிஸ் திணைக்களத்தில் நன்மதிப்புப் பெற்றவராகத் திகழ்ந்தார். அதேபோன்று இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிருவாகிகளுடனும் மிகவும் நெருக்கமாகப் பழகினார். மருதமுனைக்கென ஒரு உதைபந்தாட்ட லீக் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது குறுகிய நிலப்பரப்பைக் கொண்ட மருதமுனைக்குத் தனியாக உதைபந்தாட்ட லீக் அமைப்பது சாத்தியமா என அனைவராலும் வினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பப்பட்ட சமயம் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன நிருவாகிகளுடன் இவர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பின் காரணமாக அவர்களை மேற்படி கோரிக்கைக்கு இணங்கச் செய்து அதில் வெற்றி கண்டபோது இவரது திறமையையும் ஆற்றலையும்கண்டு நான் வியந்தேன். இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன நிருவாகிகளோடு இவர் கொண்டுள்ள மிக நெருங்கிய தொடர்பு அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் வளர்ச்சிக்கும், வீரர்களின் உயர்ச்சிக்கும் பெரிதும் உதவுகிறது. தற்போது நண்பர் ஜமால்தீன் அவர்களினதும் விழாக்குழுச் செயலாளர் ஏ.எம். இப்றாகிம் அவர்களினதும் அயராத முயற்சியின் பயனாக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையோடு இரண்டு கோடி ரூபா நிதி உதவியுடன் மஷூர் மௌலானா விளையாட்டு மைதானம் சகல வசதிகளும் கொண்ட கிழக்கிலங்கையிலேயே முதல்தர விளையாட்டு மைதானமாக அமையவிருக்கிறது.

தகைமை அடிப்படையில் தானாகவே கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகளைப் போராடிப் பெற வேண்டிய தேவையேற்பட்டபோது அதில் இவர் வெற்றிபெற்று தனது பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொண்டமைக்கு இவரது திறமையும், ஆளுமையும், தன்னம்பிக்கையுமே காரணங்கள் எனக் கூறினால் அது மிகையாகாது.

நண்பர் ஜமால்தீன் மருதமுனைக்குப் பல பெருமைகளை ஈட்டித்தந்திருக்கிறார். தற்போது இவர் பெற்றிருக்கின்ற பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் சிறப்பாகப் பணியாற்றி இன்னும் பல உயர் பதவிகளைப் பெற்று மருதமுனை மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல அல்லாஹ் இவருக்கு நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் வழங்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From



**Hon. T.L. Abdul Manaf**
District Judge,
Trincomalee.

It gives me great pleasure in sending this message of felicitation to the souvenir published to mark the felicitation ceremony and reception accorded by the people of Maruthamunai to Mr. H.L. Jamaldeen on his elevation as the first Superintendent of Police from Maruthamunai.

I wish to refresh a few lines from my message to the souvenir published to make the felicitation ceremony when Mr. H.L. Jamaldeen was promoted as an A.S.P.

In my earlier message I had predicted that Mr. Jamaldeen would acquire the other higher ranks ahead of him in near future, likewise he has been elevated to the rank of Superintendent of Police within a short period and has brought fame to Maruthamunai, as a well experienced and devoted police officer who is a graduate with many academic and professional qualifications.

It can be considered as another milestone in the long journey of the inhabitants of Maruthamunai who have been politically neglected from obtaining appointments of respectable high posts.

I have confident that Mr. Jamaldeen as an officer implementing the law will render dedicated services to the general public of this country in his capacity as a Superintendent of Police.

I congratulate him and wish him for his well beings.

13-01-2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப். யூ.எல்.ஏ. அஸீஸ்
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்
*அவர்களின்*



# ஆசிச் செய்தி

உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகவிருந்து பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்ற ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்களுக்கான பாராட்டு விழா மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

நமது பிரதேசத்தில் நாம் அறிய நம்மில் ஒருவராக இருந்து, தனது அரிய குணங்களாலும், அளப்பரிய சேவைகளாலும் இன்று உயர்ந்து நிற்கின்ற நமது சகோதரர் ஒருவருக்கு இவ்விழா எடுப்பது மிகவும் பொருத்தமான ஒரு நிகழ்வாகும்.

பல்வேறு அறிஞர்களும், கலைஞர்களும், கல்விமான்களும், துறைசார்ந்த நிபுணர்களும் நிறைந்து வாழும் மருதமுனை மண்ணில் காவல் துறையிலும் ஒருவர் சிரேஷ்டத்துவ நிலைக்கு உயர்ந்து நிற்பது இம்மண்ணுக்கும் கிடைத்திருக்கும் மற்றுமொரு புகழாகும்.

சகல இன மக்களும் செறிந்து வாழும் நமது பிராந்தியத்தில், எல்லோராலும், மிகவும் விரும்பப்படுகின்ற, நேசிக்கப்படுகின்ற ஒருவராகவும், சமாதானத்தை விரும்பும் சகலருடனும் கைகோர்த்து அதற்காக சதா உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒருவராகவும் SP ஜமால்தீன் அவர்களைக் குறிப்பிட முடியும்.

ஒரு பொலிஸ் அதிகாரியாக இருந்து கொண்டு, அவற்றுக்கு அப்பாலும், விளையாட்டு, சமூக சேவை, ஆத்மீக செயற்பாடுகளிலெல்லாம் மிகவும் ஆழமாகக் கால்பதித்து வரும் SP ஜமால்தீன் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பதவி உயர்வானது அவரது நேர்மைக்கும், திறமைக்கும், இரக்க சிந்தைக்கும், மக்களுடனான மரியாதைப் பண்புகளுக்கும் கிடைத்த ஒரு வெகுமதியாகும்.

இப்பதவி உயர்வு மூலம் நமது பிரதேசம் இன்னும் நிறைய நன்மைகளை அடையவும் SP ஜமால்தீன் அவர்கள் நமது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவும், இப்பிரதேசத்தின் சமாதானம், பாதுகாப்பு ஆகியவைகளில் மேலும் அக்கறை கொண்டு உழைக்கவும் இறைவனுடைய அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். மேலும் உயர்வுகள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாப். ஏ.எச். முஹம்மட் அன்சார்

பிரதேச செயலாளர்,
அக்கரைப்பற்று, பொத்துவில்
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

பொலிஸ் சேவையில் மருதமுனை மண்ணை ஏனைய பகுதிகளுக்கு எடுத்துக்காட்டவும், கல்முனைப் பிரதேசத்தின் முதல் மகனாகவும் அதியுயர் பதவிகளில் ஒன்றான பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு பெற்று நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் (எம்.ஏ.) அவர்களைப் பாராட்டி மருதமுனை மக்களால் எடுக்கப்படும் மகிழ்ச்சி விழாவின் போது வெளியிடப்படும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

இவர் தன் ஆரம்பக் கல்வியை தன் பிறந்த மண்ணிலும், பின் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணத்திலும் கற்று பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியானார். இவரின் கல்விக்கு வழிகாட்டிகளாக இவரது தாயாரும், மூத்த சகோதரனும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1975 ஆம் ஆண்டு தொகுதிக்கொரு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போது கல்முனைத் தேர்தல் தொகுதிக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டு அரச சேவையில் ஓர் ஆசிரியராக கற்பிட்டியில் முதல் நியமனம் பெற்றார்.

இவர் சிறு வயது முதல் விளையாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அதன் மூலம் பல பாராட்டுக்களைப் பெற்றதுடன் உதைபந்தாட்டத்தில் பல வெற்றிகளுக்குக் காரணகர்த்தாவாக இருந்து கிறீன்லைட், ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகங்களை தேசிய ரீதியாக இனங்காட்டியவர். இச் செயற்பாடுகளும் தனது திறனும் ஒருங்கிணைந்து வெளிப்பட்டதால் இவர் பொலிஸ் உதைபந்தாட்டக் குழுவிலும் இடம்பிடித்து பெயர் பொறித்த ஒரு சிறந்த விளையாட்டு வீரராகவும், உதைபந்தாட்டத் திற்கான நடுவராகவும் செயற்பட்டார். அதேபோல் உதைபந்தாட்டத்தில் இவருக்கு இருந்த ஈடுபாடும் அதன் கொள்கை விளக்கங்களில் உள்ள பூரண அறிவினாலும் இப்போதும் அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவராகவும் தொடர்ந்து இருந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் பொலிஸ் சேவையில் ஒரு சாதாரண கான்ஸ்ரபிளாக இணைந்து கொள்வதற்கு பலதரப்பட்ட தேர்வுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி இருந்ததை நாம் அனைவரும் அறிவோம். அவ்வாறான காலகட்டத்தில் அரசியல் அனாதையான ஒரு கிராமத்திலிருந்து இவர் பொலிஸ் சேவையில், உதவிப் பொலிஸ் பரிசோதகராக இணைந்து கொண்டதென்பது அவரின் தனித் திறமையென்றால் அது மிகையாகாது. அந்த வாய்ப்பே இப்போதைய இந்த விழா.

குறிப்பாக பிரச்சினைகளை எதிர்கொள்வதிலும், அதற்கான தீர்வுகளை எடுப்பதிலும் இவருக்கென்று ஒரு தனித்தன்மையுண்டு. இன்றுகூட ஜமால்தீன் சேருடைய முறையிலேயே இப்பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்று இவரது தீர்வு முறையைத் தெரிந்தவர்கள் என்னிடமே கூறுவதை என் சேவையின் போது அடிக்கடி கேட்கக் கூடியதாகவுள்ளது. ஏனென்றால் இவர் அம்பாறை மாவட்டத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், கல்முனையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகவும் இருந்த பிரதேசங்களில் எல்லாம் நானும் உதவி அரசாங்க அதிபராகவும், பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியும், கடமையாற்றிக் கொண்டும் இருக்கின்றேன்.

சுனாமியின் பிற்பாடு இவர் கல்முனைப் பிரதேசத்திற்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருக்கையில் நான் கல்முனைப் பிரதேசத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றினேன். அக்காலகட்டத்தில் இவர் இப்பிரதேசங்களின் அபிவிருத்திக்காக அவரது சேவைக்கு அப்பால் அரசசார்பற்ற நிறுவனங்களோடும், ஏனைய உயர் அதிகாரிகளோடும் ஒரு சினேகபூர்வ உறவினை ஏற்படுத்திக்கொண்டு பிரதேசத்தின் அபிவிருத்திக்காக என்னோடு அயராது உழைத்து பல அபிவிருத்திகளை அடைவதற்கு உறுதுணையாக நின்றவர்.

நமது மக்களால் எஸ்.ஐ. ஜமால்தீன் என்று செல்லமாக அழைக்கப்படும், தற்போது பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்று பாராட்டுப் பெறும் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் எஸ்.பி. அவர்களின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனும், மேலும் பல பதவியுயர்வுகளை பெற்று சொந்த மண்ணுக்கும், நாட்டிற்கும் சிறந்த சேவையை வழங்க வேண்டுமென உளமாற வாழ்த்துவதோடு ஆசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். எம்.எம். நௌபல்**
பிரதேச செயலாளர்,
கல்முனை
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்ற எமது இக்கிராமத்தைச் சேர்ந்த ஹாமிது லெப்பை ஜமால்தீன் அவர்களைப் பாராட்டி மருதமுனை மக்கள் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் 13-01-2008 ஆம் திகதி பாராட்டும் வைபவத்தன்று வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எச்.எல். ஜமால்தீன் அவர்களின் கடுமையான ஊக்கத்தின் பயனாக பொலிஸ் திணைக்களத்தின் உன்னத நிலையை அடைந்துள்ளார். இதற்கு அவரின் புத்திக் கூர்மையும், செயற்றிறனும், சிறந்த ஒழுக்கப்பாடுமே இவரை இந்த உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. மேலும், கடின உழைப்பும், தொடர்ச்சியான முயற்சியுமே எச்.எல். ஜமால்தீன் அவர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும். இது எமது கிராமத்து மக்கள் அனைவருக்கும் நல்லதொரு முன்னுதாரணமாகும். கிழக்கு மாகாணம் முழுவதும் அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரண பொது மக்கள் வரையில் அன்பாக நேசிக்கப்படும் ஒருவராகும். இத்தகைய பெருந்தகையை பெற்றதையிட்டு இம்மருதமுனை மண்ணும், கிழக்கு மாகாணமும் பெருமிதம் அடைகின்றது.

எச்.எல். ஜமால்தீன் அவர்கள் தன்னுடைய தொழில் வாழ்க்கையில் தொடர்ந்தும் உயர்ச்சி பெற வேண்டும் என்று வாழ்த்துவதோடும் தனது சொந்த குடும்ப வாழ்க்கையிலும் சிறந்து மிளிர வேண்டுமென்று மிகவும் வாஞ்சையுடன் வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவன் அன்னாருக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message From

**Eng. I. A. Hameed** I.Eng., A.M.I.E.R.E.
Chairman/ Rehabilitation Authority (REPPIA),
Former Chairman, Kalmunai Pradeshiya Sabha,
Former Engineer, Sri Lanka Telecom (Services) Ltd.



I am very much pleased to send this message on the occasion of felicitating Mr. H.L. Jamaldeen, Superintendent of Police. It is yet another coveted 'First' for our village Maruthamunai which is well known for its intellectual dominance and innovative feats in many a field.

Mr. Jamaldeen is an upright person endowed with a personality that inspires others, young and old alike. Not every Muslim village in the eastern province can boast of a person from it in the high echelon of Police Force. In that respect, Maruthamunai stands proud and feels privileged in having its blessed son decorating the high office of Superintendent of Police.

He has imprinted his uniqueness in every sphere he had the opportunity to enter. As a sportsman, as a duty conscious police officer, as the energetic President of Masjithul Kabeer Jumma Mosque, as an enthusiastic social worker and as an ebullient associate to his acquaintances I can confidently say that he is par excellence.

It is indeed very much fitting that he is afforded this felicitation. I wish him well to be victorious all the way and climb up the ladder of success to reach the top in the Police Force.

13-01-2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். எம்.ரீ.ஏ. நிஸாம் SLEAS**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**கல்முனை**
*அவர்களின்*



# ஆசிச் செய்தி

என் இனிய நண்பர் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மருதமுனை மக்கள் ஒன்றிணைந்து நடாத்தும் பாராட்டு விழா நினைவு மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்வுறுகிறேன்.

இப்பிரதேசத்தில் மருதமுனை மண்ணுக்கு எப்போதும் தனித்துவமான பண்புண்டு. எத்துறையில் அவர்கள் இணைந்திருந்தாலும் அதில் ஈடுபாடு காட்டி எடுத்த காரியத்தை கச்சிதமாகச் செய்து முடிக்கும் திறன் இவர்களுக்குண்டு. இப்பண்புகளின் மூலமாகத்தான் நிருவாகத் துறைகளிலும், ஏனைய ஸ்தாபனங்களிலும் மிளிர்ந்து தம் மண்ணுக்கு பெருமை தந்துகொண்டிருக்கின்றார்கள்.

கல்வித் துறையைச் சார்ந்தவன் என்ற ரீதியில் எனக்கும் மருதமுனைக்கும் மிக நெருக்கமுண்டு. கல்வி ரீதியாக மருதமுனை மக்களின் செயற்பாடு எப்போதும் என்னைச் சிலிர்க்கவைக்கும், தீவிரமாகச் செயற்பட வைக்கும்.

நண்பர் எச்.எல். ஜமால்தீன் பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் எந்தக் காரியத்தையும் எவ்வித தடைகள் வந்தாலும் வெற்றிகொண்டு நிறைவேற்றுவதும், தனது ஆளுமையான தலைமைத்துவப் பண்புகளினால் பணிவாகவும், பண்பாகவும் செயற்பட்டு சமூகத்திற்கும் மருதமுனைக்கும் உழைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுனாமியால் அழிந்த மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மீள் உருவாக்கத்தில் எச்.எல். ஜமால்தீன் அவர்களின் ஈடுபாடும், உழைப்பும் மருதமுனைக் கல்வி வரலாற்றில் முக்கிய தடங்களில் ஒன்று.

இன, சமூக, பிரதேச நல்லுறவுகளைப் பேணுவதில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் எச்.எல். ஜமால்தீன் மேலும் பதவியுயர்வு பெற்று எமது சமூகத்திற்கும், பிரதேசத்திற்கும் நற்சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவருக்கான பாராட்டு விழா சிறப்புற உளமாற வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். எம்.சீ. அகமது முகையதீன் J.P.**
**தலைவர்,**
**மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல், மருதமுனை**
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

**Dr. H.L.** ஜமால்தீன் **J.P., M.A.** அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றதையொட்டி மருதமுனை மக்கள் எடுக்கும் மாபெரும் பாராட்டு விழாவுக்கு மருதமுனை மஸ்ஜிதுந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் சார்பாக இவ்வாசியுரையை வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

மருதமுனை மண்ணுக்கு புகழ் சேர்த்த, சேர்த்துக் கொண்டிருக்கின்ற சிரேஷ்ட மாணவர்களில் இவரும் ஒருவர் என்பதில் எவருக்கும் இரண்டாவது கருத்து இருக்காது. தனது மாணவப் பருவத்திலேயே விளையாட்டுத் துறையில் தனது திறமையை உலகுக்குக் காட்டியவர். உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டம் வரை சென்று மருதமுனை மண்ணுக்கு புகழ் சேர்ந்த முதலாவது உதைபந்தாட்ட வீரன்.

உயர் கல்வியில் கலைமானியாக, முதுமானியாக, வைத்திய கலாநிதியாக, பல பட்டங்களைப் பெற்ற இவர் தான் சார்ந்த துறையில் நடைபெற்ற பல அதியுயர் பரீட்சைகளிலும் விஷேட சித்திகளைப் பெற்று பல சாதனை படைத்துள்ளார்.

நீண்ட பல வருடங்களாக அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கௌரவ தலைமைப் பதவியை அலங்கரித்து வரும் இவருடைய காலத்திலேயே அம்பாரை மாவட்டம் உதைபந்தாட்டத் துறையில் பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. பல தசாப்தங்களாக இவர் தலைமையில் இயங்கும் ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம் விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாமல் சமூக சேவையிலும் சிறந்து விளங்குகின்றது. அத்தோடு மருதமுனை மஸ்ஜிதுல் பீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதம தர்மகத்தாவாக இருந்துகொண்டு அரிய பல அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் இப்பிரதேசத்தில் உச்சக்கட்டத்தில் இருந்த போது, இவரின் மதிநுட்பமும், துணிச்சலான நடவடிக்கைகளுமே இப்பிரதேசத்தையும், நமதூரையும் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றியது என்பதை யாராலும் குறைத்து மதிப்பிட முடியாது.

தனது தொழில்சார் வாழ்வில் ஆசிரியராகப் பிரவேசித்த இவர் மருதமுனையின் முதலாவது **S.I.** யாக, மருதமுனையின் முதலாவது **I.P.** யாக, மருதமுனையின் முதலாவது **A.S.P.** யாக பொலிஸ் துறையில் தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இன்று மருதமுனையின் முதலாவது **S.P.** யாக உயர்ந்து விழாக்காண்கின்றார்.

இவர்சார்ந்த துறையில் அதி உச்ச பதவிவரை உயர்வு பெற்று மருதமுனைக்கும் இப்பிரதேசத்திற்கும் மேலும், மேலும் புகழ் சேர்க்க வேண்டும் என்று ஆசிப்பதோடு இவரின் நீண்ட ஆயுளுக்கும் நீடித்த சுகத்திற்கும் இறைவனைப் பிரார்த்தித்தவனாக இச்சந்தர்ப்பத்தை அளித்த விழாக்குழுவினருக்கு நன்றி கூறுகின்றேன்.

வஸ்ஸலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். ஏ.எச்.ஏ. மூாஹிர்**
கிராம உத்தியோகத்தர்,
செயலாளர்,
மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல், மருதமுனை
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

எமது மண்ணைச் சேர்ந்த ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு எமது ஊர் மக்களால் வழங்கப்படும் பெரு விழாவையிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன். எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே.

ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து பழகும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் எமது பள்ளிவாயலில் அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு அவரோடு இணைந்து செயற்படும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அவரின் செயற்பாடுகள் யாவும் அதிரடியாகவே அமைந்திருக்கும். பள்ளிவாயலின் அபிவிருத்தி வேலைகளிலும், பொதுவான வேலைகளிலும், நிருவாகச் செயற்பாடுகளிலும் வெளிப்படையாகவே அமைந்திருக்கும்.

பள்ளிவாயலின் அபிவிருத்திக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அன்னாரது செயற்பாடுகள் தொடர்ந்தும் எமது பள்ளிவாயலுக்குக் கிடைக்க வேண்டுமெனவும் அவர் நற்தேகாரோக்கியத்தோடு வாழ வேண்டுமெனவும் வல்ல நாயனிடம் இறைஞ்சுகிறேன்.

ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பள்ளிவாயலின் அபிவிருத்தி வேலைகளில் முழுமூச்சாக இயங்குவதோடு மருதமுனை மக்கள் சந்தையையும் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு பல உயர் அதிகாரிகளையும் தொடர்புகொண்டு மருதமுனை மக்கள் சந்தையை புதிதாகக் கட்டுவதற்கான அனுமதியையும் பெற்று எமது நிருவாகத்திற்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளார். அதேபோல் மருதமுனையில் மேட்டுவட்டையில் அமைக்கப்பட்டுள்ள ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அபிவிருத்தி வேலைகளில் பெரும்பங்கு கொண்டு செயற்பட்டார். இஸ்லாமிக் றிலீப் சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் நிதி உதவியோடு 350 மீட்டர் நீளமான ஒரு பாதையை அமைக்க அந்நிறுவனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கான திட்ட முகாமையாளர் ஜனாப். மாஓ அவர்களுடன் மாதக் கணக்கில் பேசியும் ஜனாப். ஏ.எச்.எம். அன்சார் அவர்களுடன் இணைந்தும் செயற்பட்டதால் தான் அந்த வீதி நிர்மாணிக்கப்பட்டது. அந்த வீதியே மருதமுனையின் மேற்குப் புற அபிவிருத்திக்கு கால்கோளாய் அமைந்தது என்பதில் ஐயமில்லை. ஊருக்கான இவரின் செயற்பாடுகள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். அத்தோடு ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் ஓய்வு பெறும் முன்பு பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்று மேலும் நமது ஊரின் பெயரை உலகறியச் செய்வார் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

இம்மலர் வெளியீட்டு நாளான இன்று நடைபெறும் இப் பெருவிழா சிறப்புற வேண்டுமென எமது பள்ளிவாயல் நிருவாகிகள், மரைக்காயர்கள், ஜமாஅத் மக்கள் சார்பாக வாழ்த்தி அவர் சீராகவும் சிறப்பாகவும் சிறந்த தேகாரோக்கியத்துடன் வாழ வேண்டுமென மீண்டுமொரு முறை வல்ல நாயனிடம் பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். எஸ்.எல். அப்துல் றஹீம்**
அதிபர்,
கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி, மருதமுனை.



*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி கௌரவிக்கும் விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் அகம் மிக மகிழ்வுறுகிறேன்.

1975 - 1980 காலப்பகுதியில் சிறந்த ஆளுமைமிக்க ஆசிரியராகவும், 1980 தொடக்கம் உதவிப் பொலிஸ் பரிசோதகராக பொலிஸ் சேவையில் இணைந்து ஒரு நல்ல ஆசிரியராகவும், பின்னர் படிப்படியாக உயர்ந்து இன்று பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி ஏற்றிருக்கும் இவருக்குக் கிடைக்கும் கௌரவம் மருதமுனை மண்ணுக்குக் கிடைப்பதாகவே நான் கருதுகிறேன்.

ஒரு திறமையான விளையாட்டு வீரனாக தனது திறமையை வெளிக்காட்டி தாம் அங்கம் வகிக்கும் கழகத்தினூடாகவும் அதி உயர் பதவிகளை அலங்கரித்தவர். மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் பதவி மூலம் தன்னை மதரீதியான செயற்பாடுகளுக்கும் உட்படுத்திக்கொண்டவர்.

அவர் அங்கம் வகிக்கும் ஈஸ்டன் யூத் விளையாட்டுக்கழகம் விளையாட்டுக்குச் சமனான கல்விச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் நோக்கில் 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களைக் கௌரவித்தல், க.பொ.த. சாதாரண தரத்தில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுதல் என விரிவுபடுத்தி இருப்பதற்கு அவரது கல்வித் துறைசார் நாட்டமே காரணமாகுமெனத் துணிந்து கூறலாம்.

*"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக் கேட்ட தாய்"*

என்ற வள்ளுவன் குறளுக்கு ஒப்ப இவரது சாதனைகளையும், பதவியுயர்வுகளையும் அதற்கு வழங்கப்படும் கௌரவங்களையும் கேட்டு தனது பழைய மாணவன் என்ற வகையில் அல்-மனார் என்ற கல்வித் தாய் பூரிப்படைகின்றாள்.

நமது நாட்டுக்குள் மட்டுமன்றி - உலகளாவிய ரீதியில் பல உயர் பதவிகளை வகிக்கும் அல்-மனாரின் பழைய மாணவர்கள் வரிசையில் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்களும் தாம் பெற்ற பதவி மூலம் அன்னை மண்ணுக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டுமென்றும், உயர்வு பெறவேண்டுமென்றும் உளமாற வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். எஸ்.எல்.எம். ஜலால்தீன்**
அதிபர்,
கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை.



*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

மருதமுனையின் கீர்த்தி அகிலமெல்லாம் பரவ அணிசேர்த்த, அதற்கு மகுடம் சூட்டிய அதன் அருந்தவப் புதல்வரும், இம்மண்ணுக்கு இன்னுமொரு அணிகலனாய் விளங்கும் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றமைக்காக மருதமுனை மக்கள் அவரைப் பாராட்டி வெளியிடும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

1975 இல் ஆசிரியத் தொழிலில் கால்பதித்து 1980 இல் பொலிஸ் பரிசோதகராக (SI) வேறு தொழில் பெற்று தனது பணியைச் சிறப்பு, நேர்மையுடன் மேற்கொண்டு அதில் பல படிமுறையான முன்னேற்றங்களைக் கண்டு தனது அயராத உழைப்பினாலும், தொழில் நிபுணத்துவம், திறமையின் மூலம் 1998 இல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பரீட்சையில் தேறி, அதை அடைவதற்கு இருந்த பல தடைகளை வென்று தனது பதவியை உறுதிப்படுத்திக்கொண்டு தனது கடமையில் காத்திரமான பல சாதனைகளைப் புரிந்த ஜனாப். ஜமால்தீன் அவர்கள் 2007-01-27 ஆம் திகதியன்றும் மருதமுனை மக்களால் பாராட்டப்பட்டார்கள்.

மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவரான இவர்கள் 1994 ஆம் ஆண்டிலிருந்து அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவராக இருந்துவருவதும் குறிப்பிடத்தக்கது. மருதமுனையின் விளையாட்டுத் துறை விருத்திக்கும், குறிப்பாக உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கும் காலாக நின்று உழைத்த பெருமை இவரையே சாரும்.

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அபிவிருத்திச் சபையின் உப தலைவரான இவர்கள் இப்பாடசாலையின் உயர்ச்சிக்காக அனுதினம் அயராது உழைத்து வருகின்றார். அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், தலைவர்களை முறையாக அணுகி இதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக வளங்களைப் பெற்றுத் தருவதில் அர்ப்பணத்தோடு இவர் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

ஷம்ஸின் எந்தவொரு விழாவும் இன்றைய மஸ்ஜிதுல் கபீர் தலைவரின் உதவி, ஆலோசனை, அனுசரணையில்லாமல் நடந்தேறியதில்லை. ஷம்ஸை அவர் மஸ்ஜிதின் ஒரு பாகமாகவே கருதி அதன் அபிவிருத்தி, புனர்நிர்மாணப் பணிகளில் தன்னை ஒரு ஊழியனாகவே கருதி அவர் ஆற்றிவரும் பணி என்றென்றும் நினைவு கூரத்தக்கவை.

இவருடைய வருகையால் மஸ்ஜிதுல் கபீர் புதுப்பொலிவு பெறுகின்றது. இதற்காக ஒரு வரவேற்பு முகப்பை அமைத்து, அதன் கட்டுமானப் பணிகளிலும் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றார். மஸ்ஜிதுல் கபீர் நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் இவர் மேற்கொண்ட அயராத முயற்சியால் நவீன வசதிகளைக் கொண்ட புதிய சந்தையொன்றை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றி கண்டுள்ளார். இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் அதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

விளையாட்டு, கல்வி அபிவிருத்தி, சமூக, சமயப் பணிகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் இம்மண்ணுக்காக உழைத்து வரும் டொக்டர் ஜமால்தீன் நீடூழி காலம் வாழ்ந்து தனது சேவைகளை மேலும் தொடர உளமாற வாழ்த்தி, கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிமானிகள் சார்பாக வாழ்த்துரை வழங்குவதில் உளநிறைவு பெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். ஏ.ஆர். அப்துல் றாசிக் B.A., Dip-in-Ed.**
அதிபர், அல்-ஹம்றா வித்தியாலயம்,
மருதமுனை
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

மருதமுனைக் கிராமத்தின் உயர் ஆளணி வளங்களில் நண்பர் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் சிறப்பானதோர் இடத்தில் இருப்பது எமது சமூகத்திற்கு பெரும் கௌரவமாகும்.

திட்டங்களை வரைந்துவிட்டு வளங்களைத் தேடும் முயற்சி, வல்லமை மிக்க தலைமைத்துவத்தின் ஆளுமை மிக்க பண்புகளில் ஒன்றாகும். அத்தகைய தன்னம்பிக்கையுடைய வலிமைமிகு தலைவர்களால் மட்டுமே புதுமைகளையும், புரட்சிகர மாற்றங்களையும் செய்ய முடியும். இந்த அடைமொழிக்கு முற்றிலும் பொருத்தமானவர் பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள்.

மருதமுனைக் கிராமத்தின் பொலிஸ் வரலாற்றில் இரட்டைச் சதமடித்த வீரர் அவர். இளம் வயதில் உயர் பதவிகள் அவரைத் தேடி வந்து அலங்கரித்தன. இது அவருக்கு மட்டுமல்ல இந்த சமூகத்திற்கும் பெருமைதான்.

தலைமைத்துவமும், முகாமைத்துவமும் எல்லோருக்கும் பொருத்தமுடையதல்ல. ஆனால் நண்பர் ஜமால்தீனுக்கு அவை கைவந்த கலையாகவே மாறிவிட்டது. விளையாட்டுக் கழகத் தலைவராக, உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவராக, ஷம்ஸ் நலன்புரிச் சங்கத் தலைவராக, மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாயல் தலைவராக இவர் ஆற்றும் பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கது.

எதிர்காலத்தில் மேலும் பொலிஸ் சேவையில் இவர் உயர்பதவிகளைப் பெற்றுக்கொள்ள இறைவன் துணைபுரிய பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். எம்.எச். ஹுமாயூன்**

அதிபர், கமு/ புலவர்மணி சரிபுத்தீன் வித்தியாலயம்
பெரியநீலாவணை

*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்ற ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்களைப் பாராட்டும் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எனது சிறுபராய பாடசாலைத் தோழனாக இருந்து எச்.எல். ஜமால்தீன் அவர்கள் தனது சேவையில் பல்வேறு பதவிகளைப் பெற்று உயர்வடைந்து சென்ற நிலையிலும் எங்கள் நட்பின் நெருக்கத்தை மறக்காதவர். எங்கு சந்தித்தாலும் உரிமையுடன் பெயர் சொல்லி அழைத்து தன்னுடன் இருப்பவர்களுக்கு அறிமுகம் செய்யும் எளிமையான குணம் கொண்டவர். இப்பண்பு பற்றி பலரிடமும் கூறி நான் மகிழ்வதுண்டு. இவர் எனது பாடசாலை வாழ்க்கையில் மறக்கமுடியாத நபர்களில் மருதமுனையில் முதலிடத்தில் இருக்கின்றார். இவரின் உயர்வில் நான் திருப்தியும் சந்தோசமும் அடைகின்றேன்.

எமது பாடசாலைக் காலங்களில் திடகாத்திரமான நடையும், நேரிய பார்வையும், துணிச்சலான பேச்சும், துணிச்சலான செயற்பாடும் கொண்டிருந்தவர். இத்தகைய இயல்பு பிற்காலத்தில் பொலிஸ் சேவையில் இணைந்து சேவையாற்றி முறையாகப் பெற்ற பதவி உயர்வுக்கு பொருத்தமான சான்று என்றால் அது மிகையாகாது. விளையும் பயிர் முளையில் தெரியும் என்பது இங்கு தெளிவாக உள்ளது.

தனது வேலைப்பழுக்கள் மத்தியிலும் பொதுச் சேவையினை மிகவும் அர்ப்பணிப்புடன் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார். பள்ளிவாசல், விளையாட்டுக் கழகம் போன்ற பொது ஸ்தாபனங்களில் தலைமைப் பதவிகளை வகித்து அதன் மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டு வருகின்றார். இவரின் தன்னலமற்ற சேவையினால் மருதமுனையும் அவரின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசமும் அமைதியும், சுபீட்சமும் அடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எனவே எச்.எல். ஜமால்தீன் அவர்கள் தான் பணியாற்றும் பொலிஸ் சேவையில் அதி உச்சப் பதவிகள் வரை உயர்வடைந்து செல்லவும், நீண்ட ஆயுளுடனும், தேக ஆரோக்கியத்துடனும் வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்-ஹாஜ். எம்.எஸ். ஐயூப் J.P.

மத்தியஸ்த சபை உறுப்பினர், மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாயல் கட்டட நிர்மாணக்குழுத் தலைவர்

*அவர்களின்*



# ஆசிச் செய்தி

இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெறும் சகோதரர் எச்.எல். ஜமால்தீன் அவர்களுக்கு வழங்கப்படும் பாராட்டு விழாவின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் நினைவு மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

மருதமுனை சமாதான சபையின் தலைவராக நான் செயற்பட்ட காலத்தில் அதன் ஆலோசகராக இருந்து எமது சமாதான சபை திறம்பட இயங்குவதற்குப் பக்கபலமாக இருந்ததோடு இப் பிராந்தியத்தில் இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட வேளைகளில் இனங்களுக்கிடையே அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் சகோதரர் ஜமால்தீன் அவர்கள் தியாக சிந்தனையுடன் முன்னின்று உழைத்தது எம் நினைவுகளில் பசுமையாகப் பதிந்துள்ளது.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் பதவியை வகித்து வரும் சகோதரர் ஜமால்தீன் அவர்கள் சமயப் பணிகளில் அதிக ஈடுபாடு காண்பிப்பதோடு, பள்ளிவாயல் கட்டட நிர்மாணப் பணிகளில் முழுமூச்சாக உழைத்து வருகின்றார்.

இத்தகைய ஒரு பெருமகனை மருதமுனை மக்கள் பாராட்டுவது மிகப் பொருத்தமானதே. சகோதரர் ஜமால்தீன் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டுமெனவும், மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று எமது மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். என்.எம். இஸ்மாயில் J.P.**
தலைவர்,
ஹைகுறோவ் சமூக அபிவிருத்திச் சங்கம்
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

மருதமுனை மக்களால் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எல். ஜமால்தீன் எம்.ஏ. அவர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தமைக்கு நடாத்தப்படும் பாராட்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனக்கும் எஸ்.பிக்கும் இடையில் உள்ள உறவு நெருக்கம் பெற்று கால் நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. அவருடைய விடயங்களை நன்கு அறிந்தவன் என்ற வகையில் என்னால் பல விடயங்களை எழுத முடியும். ஆனால் வாழ்த்துச் செய்தியில் மற்றவர்களுக்கும் பக்கங்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காக சில விடயங்களை மாத்திரம் எழுதலாம் என நினைக்கின்றேன்.

அவரது நட்புக் காலத்தை எடுத்துக்கொண்டால் அவரது நன்மைகள், தீமைகள், இன்பம், துன்பம் ஆகியவற்றில் இரண்டறக் கலந்தவன் என்ற வகையில் இன்னும் ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம். அவர்தான் எனது அருமை நண்பரும், மைத்துனருமாகிய தொழிலதிபர் ஏ.எம். இப்றாகிம், மெரிகோல்ட் நிறுவன உரிமையாளர். அவரை மறந்துவிட்டு இந்த செய்தியை என்னால் வழங்கமுடியாமல் உள்ளது, காரணம் மூவருந்தான் சகல விடயங்களிலும் பங்கெடுக்கின்றவர்கள். ஜமால்தீனுடன் நெருங்கிய நட்பு வைத்திருந்ததால் இப்றாகிம் அவர்கள் பல விடயங்களில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டார்கள். அவருக்கு ஒரு காலத்தில் உயிர் அச்சுறுத்தல் கூட ஏற்பட வாய்ப்புக்கள் இருந்தன. அவைகளை எல்லாம் துச்சமாக மதித்து உறவைப் பேணி வந்தவர் இப்றாகிம். அதனால்தான் எனது வாழ்த்துச் செய்தியில் அவரது பெயர் நினைவு கூரப்படுகின்றனது.

காரணம் ஜமால்தீன் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள். அதாவது இதய சுத்தியுடன் நெருங்கிப் பழகியவர்கள். இலகுவில் பிரியமாட்டார்கள். அப்படிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகள் அவரது ஒவ்வொரு சிந்தனையும் தூரநோக்குடன் இருப்பவை. இந்த ஊரின் நன்மை கருதி பல விடயங்களை முன்னெடுத்துச் சென்றவர். அதற்குப் பல உதாரணங்களைக் காட்டலாம். ஆனால் சில விடயங்களை ஞாபகப்படுத்தலாம். முதலாவதாக, அவர் தலைவராக இருக்கின்ற மருதமுனையில் மூத்த விளையாட்டுக் கழகமான ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் பல வருடங்களாக நடாத்தப்பட்டு வருகின்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களை இன மதங்கள் பாராமல் ஊக்கப்படுத்து வருடா வருடம் நினைவுப் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கும் விழா. இது அவரது சிந்தனையில் உதித்த ஒரு நல்ல விடயம். அந்த விழாவைத் தொடர்ந்து மிகவும் சிறப்பாக நடாத்தி வருகின்ற மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்திற்கும் அதன் பொதுச் செயலாளருக்கும், நிர்வாகிகளுக்கும், அதன் அங்கத்தவர்களுக்கும் மருதமுனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, மருதமுனை மசூர் மவ்லானா விளையாட்டு மைதானம் கடந்த சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டு பொலிவிழந்து கிடக்கின்றது. அதன் புணர்நிர்மாண வேலைக்காக சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் புணர் செய்யும் வேலை எதிர்வரும் காலங்களில் மிகத்துரிதமாக நடைபெற அவரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது, மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல் பொதுச் சந்தைக்கான புதிய கட்டிடம் மிகவும் நவீன முறையில் அமைக்கப்படவிருக்கின்றன.

நான்காவது, மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டிட புணர்நிர்மாண வேலைகள் சென்ற நிர்வாக காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது ஜமால்தீன் அவர்களுடைய காலத்தில் மிகத்துரிதமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

ஐந்தாவது, சுனாமியால் முற்றாகப் பாதிப்படைந்த மருதமுனையின் முன்னணிப் பாடசாலையில் ஒன்றான ஷம்ஸ் மத்திய கல்லூரியின் புதிய அமைப்பு விடயம். இவைகள் ஐந்தும் ஜமால்தீனின் தூரநோக்கிற்குச் சான்றுகள். இவைகளை விட பல விடயங்களை பல இன்னல்களுக்கும் கடும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் எதிர்நீச்சல் போட்டுச் சாதித்துள்ளார்.

அவர் எப்போதும் பதவி உயர்விற்காக எந்த அரசியல் வாதிகளையும் வால் பிடிக்கவில்லை. யாரின் சேலைத்தலைப்பையும் பிடிக்கவில்லை. இதை என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகக் கூற முடியும். காரணம் அவருக்குக் கிடைத்த பதவி உயர்வுகளின் விடயங்களை நன்கு தெரிந்தவன். அவர் S.I. யாக இருக்கும் போது எதிர்நீச்சல் போட்டுத்தான் I.P. ஆனார். அந்தக்காலத்தில் இப்பகுதியில் இருந்துவந்த பிரதேசவாத நோயினால் மருதமுனையான் என்ற ஒரே காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டார். இதனால் இவர் தான் பாதிக்கப்பட்டதைக் காரணம் காட்டி உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து பழிவாங்கப்பட்டது உண்மைதான் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்து உடனடியாக C.I. அடுத்து A.S.P. இரு பதவிகளையும் வழங்கும்படி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு இடப்பட்டது. அதன்படிதான் அவருக்கு இப்பதவி உயர்வு கிடைக்கப்பெற்றது. இவர் ஒரு நிறைகுடம். கல்வியில் சிலரைப்போல் இருட்டில் பட்டம் பெற்றவர் அல்ல. பட்டதாரியாகத்தான் பொலிஸ் சேவையில் இணைந்தார். தற்போது ஒரு M.A. பட்டதாரி என்பது நாடறிந்த உண்மை. அண்மையில் கூட புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவிற்குச் சென்று வந்தார். மனித உரிமைகள் சம்பந்தமான பரீட்சைகளில் சித்தி எய்தி தராதரப்பத்திரங்களும் வைத்துள்ளார். சிறந்த ஒரு நாடறிந்த விளையாட்டு வீரன். பொலிஸ் திணைக்கள விளையாட்டுக் குழுவில் இடம்பெற்றவர்.

இந்த ஊரில் ஒரு சதத்திற்கும் பெறுமதியில்லாதவர்கள் சிலர் சொல்வது போல் எந்த விடயத்திற்கும் பின்கதவால் சென்றவர் இல்லை. அது அவரது வாழ்க்கையில் இடம்பெறவில்லை. எனவே S.P. ஐப் பற்றி என்னால் தனிப்பட்ட முறையில் ஒரு புத்தகமே எழுதலாம். ஆனால் இது அவருக்கு மருதமுனை மக்களால் ஏகோபித்த முறையில் நடைபெறும் விழா. இவ்விழா சிறப்புற நடைபெறுவதோடு இவைகளுக் கெல்லாம் காரணமாக இருந்த அவரது அன்புத் துணைவியார் சித்தி ஜனூபா ஜமால்தீனுக்கும், அவரது பிள்ளைகளுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இறைவனின் ஆசி கிடைக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் அவர் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெறும் போது ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஓய்வுபெற இறைவன் ஆக்கிவைப்பானாக. வாகிரதஃவானா அனில் ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

வஸ்ஸலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். என்.எம். இஸ்மாயில்** B.A., J.P.
செயலாளர்,
மருதமுனை ஷம்ஸ் நலன்புரிச் சங்கம்
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

மருதமுனை மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை தந்து கொண்டிருக்கும் எம் மண்ணின் மைந்தன் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு மருதமுனை மக்கள் உள்ளார்த்தமாக இணைந்து நடாத்தும் பாராட்டு விழா நினைவுச் சிறப்பு மலருக்கு மருதமுனை ஷம்ஸ் நலன்புரிச் சங்கத்தின் இவ்வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் உள மகிழ்வடைகின்றேன்.

சமூகத்திற்கும், மருதமுனைக்கும் நன்மை பயக்கும் விடயங்களை முன்னெடுப்பதிலும் அதில் தொடர்ந்தேர்ச்சியாக ஈடுபடுவதிலும், எதிர்ப்படும் தடைகளைக் களைந்து, திடமாக அதனை நிறைவேற்றுவது ஜனாப். எச்.எல். ஜமால்தீன் அவர்களின் சிறந்த ஆளுமையாகும். உயர்ந்த இலட்சியமும், உள்ளார்த்தமான செயற்பாடும், சிறந்த தலைமைத்துவப் பண்பும் "அல்லாஹ்" அவருக்களித்த நன்கொடை. அதனால் கிடைத்தது உயர்நிலை. தக்கவில்லை எதிரிகளின் பகையலை. பூவில் இணைந்த நார்தானே மணக்கும். புன்னகைதானே செலவில்லாமல் பூக்கும். புரிந்தால் பூவுலகம் இனிக்கும்.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜ"ம்ஆப் பள்ளிவாசல், அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனம், ஷம்ஸ் நலன்புரிச் சங்கம், ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம் போன்றவற்றின் தலைவராக, ஷம்ஸ் மத்திய கல்லூரி மீள் உருவாக்கக் குழுவின் உறுப்பினராக செயற்பட்டு, தூரநோக்குடன் சிந்தித்து மருதமுனையின் சமூக, கல்வி, விளையாட்டு, அபிவிருத்தி மேம்பாடுகளில் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார். மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் நிர்மாணம், சுனாமியால் அழிவுற்ற மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மீள் உருவாக்கம், விளையாட்டு மைதான அபிவிருத்தி, மருதமுனை கபீர் சந்தைக் கட்டடம் என்பன இவரின் உயரிய செயற்பாடுகளுக்கு கட்டியம் கூறுகின்றன.

இன, பிரதேச நல்லுறவிற்காக உள்ளார்த்தமாகவும், பதவிவழி மூலமாகவும், காரியமாற்றிவரும் ஜனாப். எச்.எல். ஜமால்தீன் பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் மேலும் பதவியுயர்வு பெற்று எமது மருதமுனைக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் சிறப்பான சேவையாற்ற "அல்லாஹ்" நல்லருள் புரிய பிரார்த்திக்கின்றேன். அன்னாருக்கு மருமுனை மக்கள் மனமுவந்தளிக்கும் பாராட்டு இனிதே சிறப்புற மனநிறைவுடன் வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். எம்.எல்.எம். ஜமால்தீன்** J.P.

உப தலைவர், ஈஸ்டன் யூத் வி.க., மருதமுனை,
செயலாளர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல்

*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுள்ள டாக்டர் எச். எல். ஜமால்தீன் ஜே. பி. அவர்களைப் பாராட்டி மருதமுனை மக்களால் நடாத்தப்படும் பாராட்டு விழா மலருக்கு ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தின் உப தலைவரும், மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளரும் என்ற வகையில் இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சகோதரர் ஜமால்தீன அவர்கள், எனது வாழ்க்கையில் நான் சந்தித்துப் பழகிய மனிதர்களுள் மிக முக்கியமானவர். சிறுவயது முதல் இன்று வரையும் அவருடன் உறவாக இருந்து பலவிடயங்களில் ஒன்றுபட்டுச் செயற்பட முடிந்தமையையிட்டு சந்தோஷம் அடைகின்றேன்.

எமது கழகத்தின் தலைவராக இருந்து, என்னுடனும் எமது கழக செயலாளர் ஏ. எம். இப்றாகிம் அவர்களுடனும் கலந்துரையாடி கழகத்தை வழிநடாத்திச் செல்லும் பாங்கு மிக முக்கியமானவையாகக் கருதுகின்றேன்.

விளையாட்டு, சமாதானம், பள்ளிவாசல் நிருவாக, தலைமைத்துவ விடயங்களில் நாம் இருவரும் ஒன்றாகவே செயற்பட்டு வருகின்றோம். அத்துடன் இவரிடம் காணப்படும் உயர்கல்வித் தகைமை, ஆளுமை, துணிச்சல், நேர்மை, சொல்வதைச் செயற்படுத்தும் ஆற்றல் என்பன இவரின் உயர்ச்சிக்கு என்றுமே உறுதுணையாக இருந்து கொண்டு வருகின்றன. எந்த விடயத்தையும் இனிய முகத்துடன் செயற்படுத்தும் இவர், எதிர்காலத்தில் மருதமுனை மண்ணுக்கும், சமூகத்துக்கும் பெரும் புகழை ஈட்டித் தரவேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். வை.கே. ரகுமான்**
தலைவர்,
கோல்ட்மைன்ட் வி.க., மருதமுனை
*அவர்களின்*



# வாழ்த்துச் செய்தி

மருதத்தாய் இன்று மனம் பூரித்து நிற்கின்றாள். தான் பெற்றெடுத்த குழந்தைச் செல்வங்களெல்லாம் ஒவ்வாரு துறையிலும் உச்சாணிக் கொம்பினையெட்டி கிம்பர்லியின் வைரமாகச் சுடர்விடும் போது, அகம் மகிழ்கிறாள். ஒரு பெரும் முயற்சியாளர் தன்னம்பிக்கை நிறைந்த மனிதருக்கே இன்று நாம் விழாவெடுத்திருக்கிறோம். கிழக்கிலங்கையின் முஸ்லிம்களின் வரலாற்றில் யாருமே எட்டியிராத பொலிஸ் அத்தியட்சகர் பதவியை எம் கிராம மைந்தன் டாக்டர். எச். எல். ஜமால்தீன் (எம். ஏ.) அலங்கரித்திருக்கின்றார். தனது கடமையை கண்ணியமாகச் செய்து பதவியுயர்வுகள் வரும் போது அதைக்கண்டு அகங்காரம் கொள்ளாமல் தன்னம்பிக்கை யோடு வாழ்ந்து காட்டியவரே எமது பொலிஸ் அத்தியட்சகர்.

இன்று மருதமுனை கல்விப் பொருளாதாரத்தை மட்டுமே மூலதனமாய்க் கொண்டு தன்னுடைய எதிர்காலத்தைத் திட்டமிட்டு வருகிறது. இன்று எம் மத்தியிலே உயர்ந்து நிற்கும் பொலிஸ் அத்தியட்சகர் டாக்டர் எச். எல். ஜமால்தீன் (எம். ஏ.) அவர்கள் இதற்குச் சிறந்த உதாரணம். ஒருவரைக் கௌரவிப்பதும், அவருக்காக விழா எடுப்பதும் அவர் வகித்த பதவியின் மூலம் அவராற்றிய சேவையைப் பொறுத்திருக்கிறது. இன்றைய விழாவின் கதாநாயகன் பொலிஸ் திணைக்களத்திலிருந்து பொது மக்களுக்காக ஆற்றிய சேவைகள் ஏராளம், ஏராளம்.

இத்தோடு நின்றுவிடாமல் எமது பிரதேசத்தில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினையை களைந்தெறிவதிலும் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படாமலும் பாதுகாத்து நின்றவர் பொலிஸ் அத்தியட்சகர் டாக்டர். எச். எல். ஜமால்தீன் அவர்கள். இத்தோடு ஒரு தசாப்தத்திற்கு மேலாக அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தனிப்பெருந் தலைவனாகப் பரந்த சேவையாற்றி வருகின்றார். இவருடைய சேவையினாலேயே அம்பாரை மாவட்டத்தின் உதைபந்தாட்டத் துறை இன்று அகில இலங்கை ரீதியாகப் புகழடைந்திருக்கிறது.

நாட்டின் சகல பாகங்களிலும் தியாக உணர்வோடு பணியாற்றிய பெருமையும் இவருக்குண்டு. இவருடைய வளர்ச்சிப் படிகளை ஒவ்வொருவரும் சிறந்த முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். பொலிஸ் திணைக்களத்திலே ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளிலும் அதீத சிந்தையோடு பணியாற்றி இன்று பொலிஸ் அத்தியட்சகராக உயர்ந்து நிற்கும் டாக்டர் எச். எல். ஜமால்தீன் அவர்களின் விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் உவகையடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்-ஹாஜ். நியாஸ் எம். அப்பாஸ் (PHI)**
**தலைவர், ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்,**
**மருதமுனை**
*அவர்களின் - ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின்*



# வாழ்த்துச் செய்தி

பலவாறும் புகழ்பூத்துச் சிலாகிக்கப்படும்
நம்மூராம் மருதமுனை தந்த பெருமகனார்
ஒருவராகி, உயர்ந்து நிற்கும் ஒய்யாரம்
நிறைந்த "டாக்டர்" எச்.எல். ஜமால்தீன் எம்.ஏ.
அவர்கள் இன்று பொலிஸ் அத்தியட்சகராய்
பொலிவடைந்துள்ளமை குறித்து அவருக்கு எடுக்கப்படும்
இவ்விழா சாலவும் பொருத்தமானது.

அவ்வமயம் வெளியிடப்படும் மலரில் எங்கள் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் சார்பினில் இச்செய்தியை வழங்குவதில் உளமார்ந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

கல்வியிலும், விளையாட்டிலும் வேறு பல துறைகளிலும் சிறந்து விளங்கி, கற்பித்தல் பணியிலும் ஈடுபட்டு தான் விரும்பிய பொலிஸ் சேவையில் இணைந்து இந்நிலைமைக்கு முன்னேற்றமடைந்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் அவர்களை மென்மேலும் உயர்வடைந்து சிந்திக்க வேண்டுமென ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் விழைகின்றது.

இன்று அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவராய், மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராய், விளங்குகின்ற பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் 1984 இல் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கழகத்தின் ஆரம்பகால ஆலோசகர்களில் ஒருவராய் இருந்தவர் என்பதை எண்ணிப் பூரிப்படைகிறோம். எங்களது கழக வளர்ச்சிக்கு இவரது நல்ல ஆலோசனைகள் துணை நின்றன என்பதை இத்தருணத்தில் நன்றியறிவுப்புச் செய்கிறோம்.

டாக்டர் எச்.எல். ஜமால்தீன் எம்.ஏ. அவர்கள் இந்த உயர்விலிருந்து இன்னும் உயரவும், விழா இனிதே நடந்தேறவும், எங்கள் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

பொருத்தமான இப்பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தவர்களுக்கும், ஒத்துழைத்த அனைவருக்கும் எமது கழகம் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message From*

**Al-Haj. A.L.A. Ghani** B.A. (Hons)
Divisional Officer.
Treasurer,
S.P. Jamaldeen Felicitation & Reception Committee.



It is with great pleasure that I send this message of the felicitation to the souvenir to be published to mark the Felicitation Ceremony and Grand Reception accorded by the People of Maruthamunai to Mr. H.L.Jamaldeen M.A on his promotion as the Superintendent of Police and the first S.P from Maruthamunai.

I consider that getting a promotion to the high rank in the Police Department being a Muslim is immense difficult. I can vividly remember this because as I was in the Police Service. This promotion is an honour vested on him for his justifiable, dedicated and sincere service rendered to the General Public in all parts of the Island.

I am very happy to say that Mr. Jamaldeen, S.P. is a lover of the sport so that he worked hard to get the funds to rehabilitate the Tsunami affected Maruthamunai Mashoor Moulana Public Play Ground. This act of him proves how he is interested in developing the sports activities in our village.

I have no doubt that our Mr. Jamaldeen will render his dedicated service to the General Public of this Island in his capacity as the Superintendent of Police.

I wish all the best in the future of Mr. Jamaldeen and his family.

*13-01-2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் மாதவச் செல்வன்
# எச்.எல். ஜமால்தீன் S.P.

**ஜனாப். ஏ.எம்.ஏ. சமது J.P.**
ஓய்வு பெற்ற அதிபர்



மாதவப் பயனால் மருதமுனை பெற்றெடுத்த பேர் பெரிய புகழான் - புன்னகையான் எச்.எல். ஜமால்தீன் SP எங்கள் செல்வம். கிழக்கினோர் அணிகணகி நின்றிலங்கும் இவ்வைரம் தன்னுயர்வால் தலைநிமிர்ந்து சார்ந்தோரையும் சமூகத்தையும் ஒளிரச் செய்துள்ளது.

சென்றவிடமெல்லாம் பகையும், புகையும், வன்மமும் ஒழித்து சீர்சேவை செய்ததினால் எச்.எல். ஜமால்தீனை வந்தடைந்த புதிய பதவியினால் இன்று நாம் ஒன்றிணைந்து உவகையடைகின்றோம்.

உங்களால் உயர்வடையும் பதவி உங்களை வந்தடையாவிட்டால் அப்பதவிக்குத்தான் என்ன பெருமை. கம்பீரத் தோற்றம், கண்ணில் நிதானிக்கும் நிறைவு, நடையிலே மிடுக்கு, நாணயத்தில் உயர்வு, நற்சேவையில் சிகரம், சார்ந்தாரைச் சேர்ந்தொழுகும் சீர்மை, செல்லும் இடமெங்கும் எல்லார் வாயிலும் உட்புகும் நாமம் இத்தனையும் குடி கொண்ட தலைமைக்கு ஏற்ற தகையாளன்.

ஆயிரமாயிரம் மாந்தர்கள் பிறக்கின்றனர். மறைகின்றனர். பேர் விளங்க வாழுந்த பெருந்தகைகள் இவர்களில் ஒன்றிரண்டே. அவற்றில் ஒன்றாகிய ஜமால்தீன் SP அவர்களை அனைவருமே ஆர்ப்பரித்து கொண்டாடி அகமகிழ வாய்ப்பளித்த இறைவனுக்கே புகழனைத்தும். இன்னும் உயர இதயங்கள் நிறைய வாழ்த்தினோம்.

மருதமுனை மண்ணில் சீனி முகம்மது ஹாமிது லெப்பை - அலியார் லெப்பை சீனத்தும்மா (நபீஸத்துல் மிஸ்ரியா) தம்பதிகளின் பிள்ளைச் செல்வங்களில் நான்காவதாக 01-03-1955 இல் பிறந்து சிறப்புற வளர்ந்து மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி, இளவாலை சென் ஹென்றிக் கல்லூரிகளிலும் கற்றுத் தேர்ந்தார்.

கல்லூரி வாழ்வில் கற்றலில் மேம்பட்டதுடன் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிப்படுத்திச் சாதனைகளை நிகழ்த்தி தன்னை நேசிக்க - ஆசிக்க அனேகரை ஈர்த்து அவர்கள் இதயங்களில் தடம்பதித்த எச்.எல். ஜமால்தீன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டத் துறையில் சிறப்புடன் மிளிர்ந்ததால் உதைபந்தாட்டத்தில் தங்கம் வென்ற முதல் மருதமுனை மகன் என்ற பெருமையைத் தனதாக்கினார்.

தான் பெற்ற சிறப்பான பரீட்சைப் பெறுபேற்றிற்காக எச்.எல். ஜமால்தீன் அவர்களைத் தேடிவந்த ஆசிரியப் பணியை ஏற்று கற்பிட்டி அல்-அக்ஷா, கல்கமுவ மகா வித்தியாலயங்களில் பல வருடங்கள் கற்பித்தார். இக்காலத்தில் பல்கலைக்கழகம் நுழைந்து உயர் கல்வியையும் தேடினார். பட்டமும் பெற்றார். உதைபந்தாட்டத் துறையிலும் சிறப்படைந்தார்.

பட்டப்படிப்பை முடித்து உடலாலும், உள்ளத்தாலும் முழுமை பெற்று தன்னை உயர்த்திய ஆசான்களை அணுகி தன் எண்ணங்களை வெளிப்படுத்தி சரியான வழிகாட்டலை வேண்டினார். அதிபரும், ஆசானுமாகிய அமரர் யோகம் வேலுப்பிள்ளை அவர்களின் வார்த்தையில் கட்டுண்டார். பொலிஸ் சேவையில் இணைந்தார். சீரிய கடமையினூடே திறமைகளையும் வெளிப்படுத்தினார்.

கல்முனையில் உதைபந்தாட்டத் துறையை வளர்ப்பதிலும், மேம்படுத்துவதிலும் ஜனரஞ்சகப் படுத்துவதிலும் முழு மூச்சுடன் ஈடுபாடு காட்டினார். கல்முனை கிறீன் லைட் விளையாட்டுக் கழகத்தில் ஓர் அங்கமாகி தனது பங்களிப்பைச் செய்தார். கல்முனை நகரில் உதைபந்தாட்டம் சிறப்படைந்து மாலை வேளைகளில் ஆயிரமாயிரம் ரசிகர்கள் போட்டிகளைக் கண்டு களித்து மனநிறைவடைந்தார்.

மருதமுனையில் நலிவடைந்திருந்த உதைபந்தாட்டத் துறையை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார். மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து செயற்பட்டார். மருதமுனையின் உதைபந்தாட்டக் கழகங்கள் பலதையும் இணைத்து மருதமுனை உதைபந்தாட்டச் சம்மேளனத்தையும் நிறுவினார்.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையில் இணைந்து சமயப் பணிகளில் தனது ஈடுபாட்டை ஆரம்பித்ததுடன் - அப்துல் றஹீம் சித்தி ஜனூபாவை தனது இல்லத் துணைவியாகவும் ஆக்கிக் கொண்டார். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பரீட்சைக்குத் தோற்றி சித்தியும் பெற்றார் எச்.எல். ஜமால்தீன் அவர்கள்.

பொலிஸ் பரிசோதகராகவும் (IP), நிலையப் பொறுப்பாளராகவும் (HQI) சம்மாந்துறை, மட்டக்களப்பு, தலை மன்னார், மன்னார், மொனராகலை, நானுஓயா, அக்கரைப்பற்று, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, கல்முனை போன்ற பல இடங்களிலும் நற்பணியாற்றிப் புகழ் பெற்றார்.

உயர் பதவிகளை அடைந்தால் செருக்கும், மிடுக்கும், அகம்பாவமும் கொண்டு அடுத்தவரை அண்டாது அதிகாரத் தோரணையில் வாழ்வதுதான் அப்பதவிக்கழகு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர்களில் நின்றும் வேறுபட்ட எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பதவிகளைப் பெற்றுயர்ந்தபோதெல்லாம் பணிவு கொண்டார், எளிமையாக, எல்லார்க்கும் நண்பராக, உதவும் பண்பாளராக - எல்லாச் செயற்பாடுகளிலும் பங்காளராக இணைந்து தன் இயல்பு மாறாமல் செயற்பட்டார். அவரையறிந்த அனைத்து மாந்தர் மனங்களையும் வென்றார்.

மருதமுனையின் கல்வி, கலாசார, சமய வளர்ச்சியில் பல்வேறு சிந்தனைகளை நடைமுறைப்படுத்த இலட்சிய வேட்கையுடன் சிந்திக்கும் ஜமால்தீன் அவர்கள் ஹைறுறோவ் நிறுவனம் மூலம் 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் சிறார்களின் பிஞ்சு உள்ளங்களில் மகிழ்வூட்டி கல்வியைத் தொடர ஊக்கப்படுத்தும் செயற்பாட்டை பரிசும், பாராட்டும் வழங்குவதன் மூலம் வருடா வருடம் இனபேதமின்றி நிகழ்த்தி வருகிறார்.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவராக தன்னாலியன்ற பல பணிகளை ஆற்றி தனது சேவை மனப்பான்மையையும் ஜமாஅத் மக்களின் உயர்வுக்காக குரல் கொடுத்து தலைமைத்துவப் பண்பையும் சிறப்பாக வெளிப்படுத்தி வருகிறார்.

பொறுப்புக்களை ஏற்பதும் செயற்றிட்டங்களை வகுப்பதும் அதனை முழுமையாக நிறைவு செய்ய அர்ப்பணித்து உழைப்பதும் அனைவரின் ஒத்துழைப்புடன் சித்திகரமாக அரங்கேற்றி முடிப்பதும் அன்னாருக்கு கைவந்த கலையாகிவிட்டது. அண்மைய காலங்களில் மருதமுனையில் பல அரங்கேற்றங்கள் அதற்குச் சாட்சிகளாகின.

மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்காக முனைந்து செயற்பட்டு வரும் தலைவர் எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பிரதான பாதையூடான பள்ளிவாசலின் நுழைவாயிலை கோபுரமாகக் கட்டி முடித்ததுடன் கோலாகலமான திறப்பு விழாவையும் நடாத்தினார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக தான் பெற வேண்டிய பதவியுயர்வு மறுக்கப்பட்ட அநீதிக்காக நீதிமன்றம் சென்று நியாயம் வேண்டிப் போராடினார். வெற்றியும் பெற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக எச்.எல். ஜமால்தீன் அவர்கள் உயர் பதவியடைந்த போது மருதமுனை மகிழ்ந்து 27-01-2002 இல் அன்னாரைப் பாராட்டிக் கௌரவித்தது.

சேவையினூடே தன் திறமைகளை வெளிப்படுத்தி முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சையிலும், ஹோமியோபதி பரீட்சையிலும் சித்தியடைந்தார் ஜமால்தீன் அவர்கள். கல்வி வளர்ச்சியின் பால் கொண்ட தணியாத ஆர்வத்தினால் தன் தடத்தை இழந்து தவித்து நிற்கும் ஷம்ஸ் மத்திய கல்லூரியை மீளமைக்கும் பணிக்குழுவுடன் இணைந்து ஆலோசனைகளை வழங்கி அரசியல் சக்திகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து ஒத்துழைப்பு நல்குவதால் கல்லூரி மீளமைப்பும் ஏனைய விடயங்களும் துரிதமடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசல் சார்ந்த பெரும் ஜமாஅத்தின் தனித்துவத்தைக் காத்து நிற்கும் தள பூமியான ஷம்ஸ் எனும் தளத்தை உறுதி செய்வதற்காக மீளமைப்புச் செய்வதற்காக எதிர்ப்பட்ட பல எதிர்ப்புகளையும் வெல்வதில் பங்களித்து ஓயாது பணிபுரிந்து வரும் எச்.எல். ஜமால்தீன் அவர்கள் அரசியலில் அநாதையாகி நிற்கும் மருதமுனை நகருக்கு அரசியல் மூலம் எவற்றைப் பெறலாம் என்று சிந்திப்பதிலும் வேறு வழிகளில் தேடிப் பெறுவதிலும் ஆர்வம் காட்டி உழைப்பதின் பயனாக எழுச்சி பெறும் புதிய கிராமத்தினை உடைத்துச் செல்லும் 300 மீற்றர் நீளமான பாதை ஒன்று இஸ்லாமிக் றிலீப் NGO மூலம் உருவாகியது. மஸ்ஜிதுல் கபீர் சந்தைக்கு மாடிக் கட்டடம் அமையவுள்ளது.

கடந்த 25 ஆண்டு காலம் அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட வீரர்கள் வரிசையில் சிறப்பான பங்களிப்புக்காக முதலிடம் பெற்ற எச்.எல். ஜமால்தீன் அவர்கள் விருது வழங்கி அண்மையில் பாராட்டப்பட்டார்கள்.

அம்பாரை மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பையேற்று பல வருடங்களாக சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்.

மனைவியும் நான்கு குழந்தைகளும் கொண்ட தனது குடும்பத்துடன் நேசமாக வாழ்ந்துவரும் எச்.எல். ஜமால்தீன் SP அவர்கள் நான்கு சகோதர்களையும் மூன்று சகோதரிகளையும் உடன் பிறப்புக்களாகக் கொண்டிருக்கிறார். இவர்கள் மூலம் பல மருமக்கள், பேரக் குழந்தைகளையும் கொண்ட பெரும் குடும்பமாக உறவுகளைப் பெற்று உவகை கொள்கின்றார்.

இன்று பொலிஸ் அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்று தன்னைச் சிறுமைப்படுத்த - இழிந்த வழிகளிலெல்லாம் முயற்சி மேற்கொண்ட - அழுக்காறு நிறைந்த குள்ளர்களின் முன்னால் நிமிர்ந்து நிற்கின்றார். எம்மை மகிழ்ச்சியிலாழ்த்திப் பெருமிதமடையச் செய்துள்ளார். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதால் மருதமுனை மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Felicitation Ceremony Committee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாமிது லெப்பை - சீனத்தும்மா தம்பதியின் இனிய மகன்
**எச்.எல். ஜமால்தீன் அவர்கள்**
பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு
மருதமுனை மக்கள் மனமுவந்து போடுகின்ற

# மல்லிகைப் பூப்பந்தல்

மருதக் கொடி இடையில்
பூத்த மணி முத்தழகே
மாந்தோப்பில் உலாவுகின்ற
மாலை நிலா அழகே

மா மருதமுனை இன்று
பேருவகை கொண்டுனக்கு
பூவாடை நெய்து
போர்த்தி விட்டுப் பார்க்கிறது
வானோடை மேகம் போல்
தேனான செந்தமிழில்
தெம்மாங்கு படிக்கிறது

தங்கச் சருகை
ஜனூபாவை கைப்பிடித்து
பொங்கும் உணர்வலையில்
சங்கமித்தாய்,
சந்ததிகள் கண்டாய்

பள்ளியிலும் புள்ளி
பள்ளிவாசலிலும் நீ புள்ளி
துள்ளித் துடுப்பாக
தொடருமுந்தன் சேவைகளை
அள்ளிப் பருகும்
அழகு மணி மருதமுனை

SI என
இலக்கமிட்டு
காவல் துறை திடலில்
கால்கள் பதித்து நின்றாய்
SP என இப்போது
முன்னணியில் ஓடுகிறாய்
இன்னும் இருப்பவற்றை
தப்பாது நீ பிடிப்பாய்
எப்போதும் மருதன்னை
இறைவனிடம் கேட்கிறது

''நிலவும் மலரும் பாடுது'' என்று
சுரத்தோடு நீ பாடியது
நினைவில் எழுந்துவந்து
ரீங்காரம் செய்கிறது

ஏற்றதை நீ செய்கையிலே
என்ன இடர் துயர் வரினும்
யாரென்ன சொன்னாலும்
கச்சிதமாய் அதை முடிக்க
சித்தம் மிகக் கொண்டவன் நீ

எத்தனையோ பாலங்கள்
உண்டுதான் மெய்யெனினும்
இன உறவுப் பாலம் நீ
சொன்னால் மிகையல்ல

உன் பணி மேலும் தேவை
உன் குரல் ஒலிக்க வேண்டும்
கிண்ணென எழுந்து நிற்கும்
கண்ணே எம் ஜமால்தீனே.

ஆயுள் செழிப்பாக
நின் குடும்பம் நலம்வாழ
வல்ல துணை அல்லாஹ்வை
வாஞ்சையுடன் வேண்டுகிறோம்

கவி : அபூ வாஸிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழுச் செயலாளரிடமிருந்து...



**எனது இனிய நண்பர் எச்.எல். ஜமால்தீன் அவர்கள் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மருதமுனை மக்களால் அளிக்கப்படும் பாராட்டு விழாவிற்கு நான் செயலாளராக இருந்து செயற்பட கிடைத்தமைக்கு இறைவனுக்கு முதற்கண் என் நன்றிகள்.**

- மருதமுனை மக்களால் எடுக்கப்படும் பாராட்டு விழாவை பெருமனதோடு ஏற்றுக் கொண்ட இன்றைய கதாநாயகன் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எல். ஜமால்தீன் அவர்களுக்கு மருதமுனை மக்கள் சார்பாகவும், விழாக்குழு சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- மருதமுனை மக்களால் எடுக்கப்படும் இப் பாராட்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய கௌரவ அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட நீபதி அவர்களுக்கும், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், முன்னாள் அமைச்சர், முன்னாள் செனட்டர், அருட் தந்தை, விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், ஷம்ஸ் நலன்புரிச் சங்கம், ஹைகுறோவ் அபிவிருத்திச் சங்கம் ஆகியோருக்கும் வரலாற்றுக் குறிப்பு வழங்கியவர்களுக்கும், விழாவின் போது பாராட்டுரை வழங்கியவர்களுக்கும், வாழ்த்துப்பா, வரவேற்புப்பா வழங்கியவர்களுக்கும், வரவேற்புப் பா பாடிய ஷம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்களுக்கும், விழாக்குழுத் தலைவருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும், மலர்க்குழுவுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- விழா சிறப்பாக நடைபெற உதவிய ஈஸ்டன் யூத் வி.க., கோல்ட்மைன்ட் வி.க., ஒலிம்பிக் வி.க., டொக்ஸா வி.க. ஆகியவற்றுக்கும் விழாக்குழு சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- விழா சிறப்பாக நடைபெறுவதற்கு மண்டபத்தை வழங்கி பல வகையிலும் உதவி செய்த அல்-மனார் மத்திய கல்லூரி அதிபருக்கு விழாக்குழு சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்விழா சிறப்புற நடைபெற பேண்ட் வாத்தியக்குழுக்களைத் தந்துதவிய ஷம்ஸ் மத்திய கல்லூரி, அல்-ஹம்றா வித்தியாலய அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வாத்தியக்குழு மாணவர்களுக்கும் விழாக்குழு சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இவ் விழாவை விளம்பரம் செய்த பத்திரிகை நிருபர்கள் அனைவருக்கும் விழாக்குழு சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இவ்விழா சிறப்புற நடைபெற தாராளமாக மனமுவந்து நிதியுதவி வழங்கிய பெருந்தகைகளுக்கும், பொருளுதவி, சரீர உதவி வழங்கிய அனைவருக்கும் விழாக்குழு சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இவ் நினைவு மலரைச் சிறப்புற கணனியில் வடிவமைத்துத் தந்த மருதமுனை ஜெஸா கிறபிக்ஸ் உரிமையாளருக்கும், அச்சுப் பதிப்புச் செய்த கல்முனை கோல்டன் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ் விழா நினைவு மலர் சிறப்புற கூடுதல் பங்காற்றிய விழாக்குழுத் தலைவர் தேசகீர்த்தி ஜனாப். ஏ.எல்.எம். முனாஸ் ஜே.பி. அவர்களுக்கும், ஜனாப். என்.எம்.எம். இஸ்மாயில் ஜே.பி. அவர்களுக்கும் விழாக்குழு சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இவ்விழாவை சிறந்த முறையில் வீடியோ படப்பிடிப்பும், நிழற்படமும் எடுத்துதவிய மருதமுனை மரிகோல்ட் ஸ்தாபனத்தாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ஒலி, ஒளி வழங்கிய சாய்ந்தமருது பைனாஸ் ஸ்தாபனத்தாருக்கும், மருதமுனை நியூ நிஸார் ஸ்தாபனத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ்விழாவின் போது பகல் போசன விருந்துபசாரத்தை சிறந்த முறையில் ஏற்பாடு செய்து வழங்கவிருக்கின்ற குழுவினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ் விழா சிறப்புற செயற்பட்ட சகல விழாக்குழுவினர்களுக்கும் ஏனைய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஏ.எம். இப்றாகிம் (மரிகோல்ட்),**
**விழாக்குழுச் செயலாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WITH BEST WISHES FROM.....

| | |
|---|---|
| Mr. M.I. Mufeen | *Al-Jabar* |
| Mr. M.I.M. Mukarraf | *RDO* |
| Mr. S.L. Fajeer | *Paris Bakery* |
| Al-Haj. S.L. Badurnayeem | *Al-Raji Enterprises* |
| Al-Haj. A.L.A. Ghani | *DO* |
| Al-Haj. M.B. Raisool Islam | *Burhans* |
| Mr. M.H. Thajudeen | *Saro Farm* |
| Mr. M.I.M. Farzan | *Engineer* |
| Al-Haj. A. Naina Mohamed | *ANM Consortium* |
| Mr. M.H.M. Risvi | *Brains* |
| Al-Haj. M.I.A. Fareed | *Barakath Tex* |
| 200 Meters Tsunami Victims Rehabilitation Organization | |
| Mr. S.M. Nazar | |
| Al-Haj. A.R.A. Rasheed *JP* | *ARAR Rice Mill* |
| Al-Haj. P. Achchu Mohamed | *Nafeel Rice Mill* |
| Mr. A.R.M. Kaleel *JP* | *Pearl Rice Mill* |
| Al-Haj. Y.K. Rahman | *Dye Factory* |
| Al-Haj. A.L. Aliyar *JP* | *Jazeemas* |
| Al-Haj. A. Zaifullah | *Timber Merchant* |
| Mr. A.H.A. Fayis | *Mahajana Rice Mill* |
| Al-Haj. M.C.M. Mustaffa | *MCM* |
| Mr. M.S.M. Failul Rahman | *Teacher* |
| Colombo Rice Mill | |
| Mr. M.S.M. Jameel *LL.B.* | *Attorney-at-Law* |
| Mr. A.R.M. Zulfi *LL.B.* | *Attorney-at-Law* |
| Mr. A.M. Kamaldeem *B.Com.* | *Principal* |
| Farwin Saw Mill | |
| Al-Haj. Dr. A.R.M. Haris *MBBS* | *Maruthamunai Clinic* |
| Mr. U.S. Sameem | *Teacher* |
| Mr. M.M. Sathakathullah | *London* |
| Al-Haj. M.M. Shafeek *Eng.* | *Cheap Palace* |
| Mr. S.L. Badurdeen | *SLB* |
| Al-Haj. M.S.M. Sanoon | *Indian Rice Mill* |
| Al-Haj. M.I. Ubaithurrahman | *Jahi Weavers* |
| Al-Haj. S.L. Nijamudeen | *SLB Saw Mill* |
| Mr. M.U. Sitheek | *Aslam Hardware* |
| Al-Haj. A.R. Barakathullah | *Barakath Trading Company* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 21250.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARIS
## BAKERY & SWEET HOUSE

கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக நவீன இயந்திரங்களைக் கொண்டு சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களை நீங்கள் பெற்றுக் கொள்ள மருதமுனையில் நாட வேண்டிய ஒரேயொரு இடம்.

உங்களுக்குத் தேவையான

- பாண்
- சுவீட் பாண்
- குரக்கன் பாண்
- பேஸ்ரி
- கேக் வகைகள்
- ஐசிங் கேக்
- றோல் கேக்
- ஜெலி கேக்
- வேப்பஸ் கேக்
- மாஸ்மல்
- முறுக்கு
- சோவி
- ஓகே கேக்
- சம்ஸா
- பெற்றிஸ்
- றோல்ஸ்



போன்ற அனைத்து உணவுப் பண்டங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**திருமண, பிறந்த நாள் மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கான அனைத்து ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்**

# பரிஸ்
## பேக்கரி என்ட் சுவீட் ஹவுஸ்

பிரதான வீதி, மருதமுனை-02.

தொலைபேசி : 067-2224969, 071-3348473, 077-3077578


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்டன் அச்சகம், கல்முனை. 067-2223939

Cover : S.A. Jezeem (Jesa Grafix) 0674920699